உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 2 வெள்ளிக்கிழமை (16-05-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:171



நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் நேற்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள்.

# நமது மக்களுக்குப் பயன்படாத நிதியை திரட்ட நாம் ஜப்பான் போக வேண்டுமா?

## நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் தலைவர் பிரபாகரன் நேரில் கேள்வி

கிளிநொச்சி,மே16

**"ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் திரட்டப்படும் நிதியை வடக்கு - கிழக்கில் உள்ள நமது தமிழ் மக்களுக்கு நாமே புனர்வாழ்வளிக்கும் விதத்தில் பயன்படுத்தக்கூடிய - நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்கள் உடைய - சட்டரீதியான கட்டமைப்பு ஏதும் இங்கு இல்லை. அப்படி இருக்கையில் நமது மக்களுக்குப் பயன்படுத்தமுடியாத நிதியைத் திரட்டுவதற்காக நாம் ஜப்பான் மாநாட்டுக்குப் போகவேண்டுமா?**

**- இவ்வாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனிடம் நேரடியாகக் காட்டமாகக் கேள்வி எழுப்பினார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தலைமையிலான நோர்வே குழுவுக்கும் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான புலிகளின் குழுவுக்கும் இடையில் கிளிநொச்சியல் நேற்று இரண்டு மணி நேரம் நேரடிப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அப்போதே தலைவர் வே.பிரபாகரன் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

நேற்றுக்காலை 8.45 மணிக்கு இராஜதந்திரிகள் வழமையாகக் கிளிநொச்சிக்கு வருகை தரும் விசேட ஹெலிகொப்டரில் நோர்வே பிரதிநிதிகள் அறுவரும் கிளிநொச்சி மத்திய

(14ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே அமைச்சருக்கு தலைவர் நினைவுப் பரிசில் வழங்குகிறார்.



கிளிநொச்சி மைதானத்தில் பீற்றர்ஸனை வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்

## அபிவிருத்தி லொத்தர் சபை விவகார அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு என்ன?

### பிரதமர் ரணில் ஜனாதிபதியின் ஆலோசகர் கதிர்காமருடன் சந்திப்பு

கொழும்பு,மே16

அபிவிருத்தி லொத்தர் சபை விவகாரத்தையடுத்து எழுந்த அரசியல் நெருக்கடி நீடித்து வருகிறது. ஜனாதிபதி தனது நிலைப்பாட்டிலிருந்து விட்டுக் கொடுக்கமுடியாது என்பதை பிரதமருக்கு அறிவித்திருப்பதாலும் அரசும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாலும் இந்த நெருக்கடி எவ்வாறு தீர்க்கப்படும் என்பது குறித்து அரசியல் அவதானிகள் அக்கறையுடன் இருந்து வருகின்றனர்.

தனது நிலைப்பாட்டை வலியுறுத்தி ஜனாதிபதி அனுப்பியிருக்கும் கடிதத்துக்குப் பிரதமர் விரிவான பதிலை அளித்த பின்னரே இருதரப்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் கடிதம் நேற்று முன்தினம் கிடைப்பதற்கு முன்னரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமருடன் இந்நெருக்கடி குறித்து ஆலோசனை நடத்தியிருக்கிறார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சு.க.-ஜே.வி.பி. முன்னணி குறித்து 18ஆம் திகதி இறுதிப் பேச்சுக்கள்

சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டு முன்னணி பற்றிய இறுதிப் பேச்சுக்கள் நாளை மறுதினம் 18ஆம் திகதி நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அன்று பிற்பகல் 2 மணிக்கு பேச்சுக்கள் ஆரம்பமாகும் எனக் கூறப்பட்டது.

இறுதிப் பேச்சுக்களை கடந்த செவ்வாயன்று நடத்துவதென திங்களன்று நடைபெற்ற பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும், தற்போதைய

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் தொடங்கும்; பீற்றர்ஸன் நம்பிக்கை!

கிளிநொச்சி,மே16

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும். என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் பேச்சு நடத்திவிட்டு கொழும்பு திரும்பு

(14ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# ஜப்பான் மாநாட்டை ஒத்திவைக்குமாறு அரசுதான் கோர வேண்டும்!

## தமிழ்ச்செல்வன் கூறுகிறார்



கிளிநொச்சி,மே16

நோர்வே வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நடத்திய பேச்சு தொடர்பாக புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

★ கேள்வி:- இன்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்கள் எவை?

☆ பதில்:- இன்றைய சந்திப்பில் பல ஆக்கபூர்வமான விடயங்கள் ஆராயப்பட்டன. யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒருவருடத்துக்கு மேலாகி விட்டது. ஒருவருடத்துக்கு மேலாகியும் எமது மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலை ஏற்படவில்லை என்பது குறித்தும் மக்களுக்கான அவசர புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பது பற்றியும் யுத்தத்தால் அழிக்கப்பட்ட கட்டுமானங்கள் மீளக்கட்டி எழுப்பப்படவில்லை என்பது குறித்தும் எமது தலைவர் விரிவாக எடுத்து விளக்கியுள்ளார்.

யுத்தநிறுத்தம் வந்தபின்னர் இடம்பெற்ற 6 சுற்றுப் பேச்சுக்களிலும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக மக்கள் மத்தியில் நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது என்றும் தேசியத் தலைவர் நோர்வே குழுவுக்கு எடுத்துக் கூறினார்.

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழுவின் (சிரானின்) கூட்டங்கள் குறித்தும் அதன் செயற்பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறிய தலைவர், இந்த அமைப்பு இன்னமும் முறையாகச் செயற்படவில்லை என்று தலைவர் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியம் செயற்படுவதற்கும் இலங்கை அரசு தடைகளைப் போடுகின்றது என்று தலைவர் தெளிவாகக் கூறினார்.

★ கேள்வி:- தலைவர் தெரிவித்த விடயங்களுக்கு நோர்வே தரப்பில் என்ன பிரதிபலிப்புக் காணப்பட்டது?

☆ பதில்:- தலைவர் தெரிவித்த சகல விடயங்களையும் நோர்வே தரப்பினர் ஏற்றுக்கொண்டனர். ஒருவருடத்துக்கு மேலாகியும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதையும் இயல்புநிலை கொண்டுவரப்படவில்லை என்பதையும் புனர்வாழ்வு, அபிவிருத்திப்பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் நோர்வேத் தரப்பினர் ஏற்றுக்கொண்டனர்.

★ கேள்வி:- இவை தொடர்பாக என்ன நடவடிக்கையை எடுக்கப்போவதாக நோர்வேத் தரப்பு தெரிவித்தது?

☆ பதில்:- தாங்கள் அரசதரப்போடு பேசி, இந்தப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி எடுப்பதாக உறுதி அளித்தனர்.

★ கேள்வி:- ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் மாநாடு குறித்துக் கலந்துரையாடப்பட்டதா?

☆ பதில்:- ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுவது தொடர்பான வேண்டுகோளை நோர்வேத் தரப்பு எம்மிடம் விடுத்தது. அதற்கு எமது தேசியத் தலைவர் விளக்கமாகப் பதில் அளித்தார். "சர்வதேச சமூகத்திடம் நாங்கள் உதவி கோரி போகும்போது, இங்கு தமிழர் தாயகத்தில் அதிகாரம் உள்ள கட்டமைப்பு ஒன்று நிறுவப்படவேண்டும். கட்டமைப்புக்கான அதிகார வரையறைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படியான நிலை ஏற்படாமல், இந்த மாநாட்டில் நாம் பங்குபற்றுவது பிரயோசனம் அற்ற ஒரு விடயமாகும். நாம் பெறப்போகும் உதவிகளை வடக்கு - கிழக்கில் உள்ள எமது மக்களுக்கு பிரயோசனப்படுத்தக்கூடிய அதிகாரம் உள்ள நிர்வாக அலகை உருவாக்காமல், இந்த மாநாட்டுக்குப் போய் நாம் உதவி கோருவது என்பது; சர்வதேச சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நாம் கருதவில்லை. இலங்கை அரசுக்கு நிதி சேகரித்துக்கொடுப்பது எங்கள் வேலை இல்லை. நாம் அந்த மாநாட்டில் கலந்துகொள்வதாயின் எமது மக்களுக்கு நன்மையளிக்கக் கூடியதும் பிரயோசனம் அளிக்கக் கூடியதுமான உறுதிப்பாடு எமக்குத் தேவை" - என்று தேசியத் தலைவர் நோர்வேக் குழுவிடம் தெளிவாகத் தெரிவித்தார்.

★ கேள்வி:- ஜப்பான் உதவி வழங்கும் கூட்டத்தை ஒத்திவைக்கும்படி நோர்வே குழுவிடம் கோரினீர்களா?

☆ பதில்:- உதவி வழங்கும் மாநாட்டை பிற்போடுமாறு நாங்கள் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், நாங்கள் கலந்துகொள்வதாயின், அது விடயத்தில் அரசுத்தரப்போடு பல இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியுள்ளது. சில உறுதிப்பாடுகளை எடுக்கவேண்டியுள்ளது. சர்வதேச சமூகம் வழங்கும் நிதி உண்மையில் எமது மக்களுக்கு சென்றடையக் கூடிய சாத்தியப்பாடான - உறுதியான - ஏற்பாடு ஒன்று இருக்கவேண்டியது அவசியம்.

அப்படியான ஏற்பாடு ஒன்றை உருவாக்கிக்கொண்டு, இரு தரப்புகளும் இணைந்து சர்வதேச சமூகத்திடம் போகலாமே தவிர, இன்றைய சூழ்நிலையில் நாம் மாநாட்டில் கலந்துகொள்வது சாத்தியம் இல்லை.

ஜப்பான் மாநாட்டைப் பிற்போடுமாறு அரசுதான் கேட்கலாமே தவிர, நாம் கேட்கவேண்டிய தேவை இல்லை.

★ கேள்வி:- புலிகள் முன்வைத்துள்ள அதிகாரமுள்ள கட்டமைப்புக் குறித்து அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறீர்களா?

☆ பதில்:- இந்தக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக பிரதமரோடும் அரச தரப்புபோடும் உடன் பேசி, சாத்தியப்பாடான சூழ்நிலை ஒன்றை உருவாக்க முயற்சிப்பதாக நோர்வேக் குழு உறுதியளித்துள்ளது.

★ கேள்வி:- 'சிரான்' இனங்கண்ட 15 திட்டங்களில் 12 திட்டங்களை தனது நிதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்போவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

☆ பதில்:- 'சிரான்' அமைப்பால் இனங்காணப்பட்ட திட்டங்களை அரசு ஜப்பான் உதவி வழங்கும் நாட்டுக்கு எடுத்துச் சென்று எமது அமைப்பால் எடுக்கப்பட்ட திட்டங்கள் எனக் காட்ட முயன்றுள்ளது. இன்றுள்ள சூழ்நிலை அரசு இப்படியான நடவடிக்கைகளை எடுக்க முயல்வது, அது அரசின் ஒரு பக்கச்சார்பான செயற்பாடு என்றே கூறவிரும்புகின்றோம்.

சிரான் அமைப்பை நல்லமுறையில் இயங்கவைக்கவேண்டுமாக இருந்தால் இந்த நடவடிக்கை காலங்கடந்த ஒரு விடயமாகும். சிரான் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்தே அந்த அமைப்பை வெற்றிகரமாகவும், சிறப்பாகவும், மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடியதாகவும் இயக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.

இந்த அமைப்பின் அதிகாரங்களை, செயற்பாடுகளை சிறப்பாகவும் உறுதியாகவும் முன்னெடுக்கக் கூடிய சூழ்நிலை ஏற்கனவே அரசு தோற்றுவித்திருக்கலாம். இன்றைய சூழ்நிலையில் அரசு அத்திட்டங்களை ஒருதலைப் பட்சமாக செயற்படுத்த முனைவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சிரான் அமைப்பு அதிகாரம் உள்ளதும், மக்களுக்கு பயன் கிடைக்கக் கூடியதுமான நிர்வாக ஆற்றல் உள்ள - நிர்வாக அதிகாரம் உள்ள - அமைப்பாகச் செயற்படாத நிலையில், அதிகாரம் அற்ற சிரான் அமைப்பைக் காட்டி உதவிபெற முனைவதுதான் சரியில்லை.

★ கேள்வி:- பேச்சுக்களை இடைநிறுத்தியமை தொடர்பாக அரசு நோர்வேக் குழு மூலம் புதிதாக ஏதாவது செய்தி அனுப்பியதா?

☆ பதில்:- இல்லை பேச்சில் இருந்து நாம் விலகவில்லை. இடைநிறுத்தியது மட்டும்தான். மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எமது தலைமையின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியிருந்தார். அதற்கு சாதகமான பதிலை இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். சாதகமான பதில் கிடைக்கும்போது எமது முடிவை மறுபரிசீலனை செய்வோம்.

★ கேள்வி:- ஒஸ்லோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட 70 மில்லியன் டொலர் உதவி கிடைத்ததா?

☆ பதில்:- 'சிரான்' அமைப்பின் செயற்பாடுகளையும், வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியத்தை இயககுவதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை அரசு இழுத்தடித்து வந்ததால், இந்த நிதி வந்துசேரவில்லை. இது எமக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

★ கேள்வி:- தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, சமாதானப் பேச்சுக்களில் எந்தவகையில் பாதிப்பை ஏற்படுத்தும் என கருதுகின்றீர்கள்?

☆ பதில்:- தென்னிலங்கையில் புதிதாக உருவான பிரச்சினையாக இந்தப் பிரச்சினையை நாம் கருதவில்லை. அவ்வப்போது காலத்துக்கு காலம் சந்திரிகா அம்மையார் இப்படியான தாக்குதல்களை செய்துகொண்டிருக்கிறார். ஆகவே, தென்னிலங்கையில் உள்ள அரசியல் சர்ச்சைகள் குறித்து கருத்துக் கூறமுடியாது. அது பற்றி எதிர்வுகூறக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை. அந்தப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளவேண்டியது சந்திரிகாவும், ரணிலும்தான்.

★ கேள்வி:- அதிகாரம் உள்ள கட்டமைப்பை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்தால், உங்கள் முடிவை மறுபரிசீலனை செய்வீர்களா?

☆ பதில்: நிச்சயமாக மறுபரிசீலனை செய்வோம். உதவி வழங்கும் மாநாட்டுக்கு போவதாக இருந்தால் வடக்கு - கிழக்குக்கு சர்வதேச சமூகம் வழங்கும் நிதியை எமது மக்களின் புனர்வாழ்வுக்கு பயன்படுத்த அதிகாரம் உள்ள கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் அத்தகைய நிலை ஏற்பட்டால் மாநாட்டுக்கு செல்வது குறித்து முடிவு செய்யலாம்.

★ கேள்வி:- உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதா இல்லையா என்ற முடிவை ஒருவார காலத்துக் குள் - 16ஆம் திகதிக்கு முன் - தெரிவிப்பதாக ஜப்பான் விசேட தூதர் அகாஷிக்கு நீங்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. அகாஷிக்கு பதில் அனுப்பிவிட்டீர்களா?

☆ பதில்:- இது தவறான செய்தி. அகாஷியை தலைவர் சந்தித்த சமயம், எமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியிருந்தார். அரசுத்தரப்பு இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதன் ஊடாகவே எமது முடிவை பரிசீலிக்கலாம் என்று அகாஷியிடம் தெரிவித்தோம். 16ஆம் திகதிக்குள் முடிவை அறிவிப்பதாக எந்த உத்தரவாதமும் கொடுக்கவில்லை.

★ கேள்வி:- அதி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இந்திய இராணுவ அதிகாரி நம்பியார் இலங்கை அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை உங்களுக்கு அனுப்பப்பட்டதா?

☆ பதில்: நம்பியாரிடம் அறிக்கை கேட்டது இலங்கை அரசுதான். ஆகவே நம்பியாரிடம் பெற்ற ஆலோசனைகள் எப்படிப்பட்டவை என்பதை நாம் கூறத்தேவையில்லை. எமது மக்களே அதற்குச் சரியான பதிலை அளிப்பார்கள்.

எமது மக்கள் தமது சொந்த இடத்தில் போய் இருப்பதற்கு வேறு ஒருவரிடம் போய் ஆலோசனையும் கருத்தும் கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. இது மக்களின் சொந்தப் பிரச்சினை. அவர்களின் அடிப்படை உரிமை. இந்த அடிப்படை மனித உரிமையைத்தான் அவர்கள் கேட்கிறார்கள்.

ஆக்கிரமித்து நிற்பவர்கள் விலகி மக்களைக் குடியமர்த்துவதற்கு எங்கும் ஆலோசனை கேட்கவேண்டிய தேவை இல்லை என்றுதான் கருதுகிறேன்.

(ஐ-3)

# மூவின சிறுவர்களும் நேற்று யாழ்.நகரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம்,மே16

திருமறைக் கலாமன்றம் நடத்தும் 'அமைதிக்கான நிகழ்வுகள்' தொடரின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றன.

'சிறுவர் சமாதானப் பாசறை' என்ற தலைப்பில் நடந்த இந்த நிகழ்வின் காலை அமர்வு காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது. திருமறைக் கலாமன்ற இயக்குநர் இ.மரியசேவியர் அடிகளார் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

மூவினங்களையும் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

மேடையில் நின்று சிலர் நெறிப்படுத்த அரங்கிலே நிறைந்திருந்த சிறுவர்கள் ஆடல், பாடல், விளையாட்டுக்கள் என்பவற்றை நிகழ்த்தினர்.

தமது கைகளை மேலே அசைத்து ஆடியவாறு பாடல்களையும் பாடிய சிறுவர்களின் காட்சி மிகவும் ரம்மியமாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து சிறுவர்கள் தமக்குள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்து கலந்துரையாடினர்.

மூவின சிறுவர்களும் பரஸ்பரம் தமக்குள் ஒற்றுமையாக உரையாடிய காட்சி மிகவும் சிறப்பாக அமைந்தது.

மாலை அமர்வில் சிறுவர் கருத்துரையமர்வு இடம்பெற்றது. பல தரப்புகளையும் சேர்ந்தவர்கள் சிறுவர்கள் தொடர்பாக கருத்துரைகளை வழங்கினர்.

மாலை 5.15 மணியளவில் சிறுவர் சமாதான ஊர்வலம் வீரசிங்கம் மண்டபத்திலிருந்து ஆரம்பமானது.

ஒவ்வொரு பிரதேசங்களைச் சேர்ந்த சிறுவர்களும் தத்தமது பிரதேசங்களுக்கே உரித்தான நடனவகைகளை நிகழ்த்தியவாறு முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து ஊர்தி ஒன்றும் அதன் பின்னால் சுலோக அட்டைகளை தாங்கியவாறு ஏனையவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

நாட்டின் பல மாவட்டங்களிலும் உள்ள திருமறைக் கலாமன்றக் கிளைகளைச் சேர்ந்தவர்களும் தத்தமது மாவட்டத்தின் பெயரைக் குறிக்கும் பதாதைக்குப் பின்னால் அணிவகுத்துச் சென்றனர். கே.கே.எஸ் வீதி வழியாக சத்திரத்துச் சந்தியை அடைந்த ஊர்வலம் அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி, கோயில் வீதி, பிரதான வீதி ஊடாக நகர்ந்து யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கை அடைந்தது.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட சிறுவர்களின் வகைவகையான நடனங்களைக் கண்டுகளிப்பதற்காக ஊர்வலம் நகர்ந்து சென்ற வீதிகளில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

மன்ற அரங்கில் நேற்றிரவு சிறுவர்களின் பேச்சுக்கள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெற்றன.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று காலைமுதல் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் 'திருமறைக் கலாமன்ற மாநாடு' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளன.

(ஐ-4)



திருமறைக் கலாமன்றத்தினால் நேற்று மாலை யாழ்.நகரில் நடத்தப்பட்ட சிறுவர் சமாதான ஊர்வலத்தில் நடனம் ஆடியவாறு சென்ற சிறுமிகளில் சிலரைப் படத்தில் காணலாம்.

# ஜனாதிபதியின் நீண்ட கடிதத்துக்கு பிரதமர் சுருக்கமான பதில் கடிதம்

## விரிவான பதில் பின்னர் அனுப்பப்படும் என்கிறார் பிரட்மன்

அபிவிருத்தி லொத்தர் சபையைக் கையேற்கும் முடிவை மறுபரிசீலனை செய்யமுடியாது என்று தெரிவித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாக அறிவித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிக்கு சுருக்கமான பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

ஜனாதிபதியின் கடிதத்துக்கு விரிவான பதில் பின்னர் அனுப்பப்படும் எனவும் பிரதமர் ரணில் தனது பதிலில் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதிக்கு பிரதமரின் சுருக்கமான பதில் கடிதம் அனுப்பப்பட்டது என்பதை பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் நேற்றுக் காலை தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கடிதத்தை, பிரதமரின் அலுவலகம் ஆராய்ந்து வருவதாகவும் விரிவான பதில் காலக்கிரமத்தில் அனுப்பப்படும் எனவும் பிரதமரின் செயலாளர் வீரக்கோன் மேலும் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பங்குபற்றிய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க அரசாங்க அச்சகத்தில் நடைபெற்ற சம்பவத்துடன் தன்னைத் தொடர்புபடுத்தி ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதில் உண்மை எதுவும் இல்லை எனச் சொன்னார்.

பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்திருக்கும் இக்குற்றச்சாட்டுக்கும் பிரதமர் தனது பதில் கடிதத்தில் பதிலளிப்பார் எனவும் அமைச்சர் அமரதுங்க சொன்னார்.

(ஐ)

# டிராக்டரின் மூடிய பெட்டிக்குள் இருந்த சட்ட விரோத குடியேறிகள் உயிரிழப்பு!

## அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் சம்பவம்

டெக்ஸாஸ்(அமெரிக்கா),மே16

டிராக்டரால் இழுத்துச் செல்லப்படும் மூடிய பெட்டி ஒன்றினுள் அடைத்துக் கொண்டு செல்லப்பட்ட 18 சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் சடலங்களை அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். முழுவதும் அடைக்கப்பட்டிருந்த அந்தப் பெட்டியினுள் வெப்பம் அதிகரித்து மூச்சுத் திணறி அவர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெற்கு டெக்ஸாஸிலுள்ள விக்ரோரியா நகரத்தில் வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தப்பட்ட டிராக்டரில் இருந்தே பொலீஸார் இந்தச் சடலங்களைக் கைப்பற்றியுள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற மெக்ஸிக்கன் நாட்டவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அந்த டிராக்டர் பெட்டி குளிரூட்டல் வசதிகளைக் கொண்டது. ஆனால், பொலீஸார் அதனைக் கைபற்றியபோது அது குளிரூட்டப்பட்டிருக்கவில்லை. இதுவே வெப்பம் அதிகரித்ததற்குக் காரணம் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

நள்ளிரவில் கிடைத்த ஒரு செல்லிடத்தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்தே பொலீஸார் இந்த டிராக்டரைக் கண்டுபிடித்தனர். எனினும், அந்தத் தொலைபேசி அழைப்பை யார் செய்தார்கள் என்று தெரியவரவில்லை.

பொதுவாக தென்னமெரிக்க நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்குள் நுழைய முயலும் சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் இவ்வாறான டிராக்டர் டெய்லர்களையோ கென்டெய்னர்களையோதான் பயன்படுத்துவது வழமை. மெக்ஸிக்கோவின் எல்லையில் இருந்து சுமார் 4 மணிநேரப் பயணத்தில் டெக்ஸாஸ் மாநிலத்துக்குள் புகுந்துவிட முடியும் என்பதனால், சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் இந்த வழியையே அதிகம் பின்பற்றுகின்றனர்.

இதுவரையில் இந்த முறையில் அமெரிக்காவுக்குள் நுழைய முயன்ற சட்டவிரோதக் குடியேற்றவாசிகளில் 62பேர் இவ்வாறு டிராக்டர் டெய்லர்களில் அடைக்கப்பட்டு மூச்சுத் திணறியே இறந்துள்ளனர் என்கிறார்கள் அதிகாரிகள். (ம)



டிராக்டர் டெய்லரில் அடைக்கப்பட்டிருந்ததால் உயிரிழந்த ஒருவரின் சடலத்தின் கால்கள் அந்த டெய்லரில் வெளித்தெரிவதை காணலாம்.



பிரான்ஸில் போக்குவரத்து ஊழியர்கள் கடந்த மூன்று நாள்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். நேற்று போக்குவரத்து அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் தோல்வியடைந்ததையடுத்து வேலைநிறுத்தம் தொடரும் என தொழிலாளர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

போக்குவரத்து தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தால் ரயில்கள் மற்றும் அரச போக்குவரத்து பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. இதனால், மக்கள் தனியார் பஸ்களுக்கு முண்டியடிப்பதை படத்தில் காணலாம்.

# செச்சினியாவில் மீண்டும் தாக்குதல் 14 பேர் பலி; மேலும் பலர் காயம்!

மொஸ்கோ,மே16

புதனன்று செச்சினியாவில் இடம்பெற்ற பெண் தற்கொலையாளியின் தாக்குதலில் குறைந்தது 14பேர் உயிரிழந்துள்ளனர்; 145 பேர் காயமடைந்தனர். இந்த வாரத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

இஸ்லாமியர்களின் பண்டிகை நாளையொட்டி மக்கள் கூட்டம் நிரம்பி இருந்த இடத்திலேயே குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

செச்சினிய சுதந்திரத் தீவிரவாதிகளே இந்தத்தாக்குதலை நடத்தியதாக பொலீஸார் கூறுகின்றனர். தாக்குதல் இடம்பெற்ற இடத்திலேயே 7 பேர் உயிரிழந்தனர்; ஏனைய 7பேர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அங்கு மரணமாகினர். ஆரம்பத்தில் 30பேர் கொல்லப்பட்டதாக செச்சினிய அவசர நிலை அமைச்சர் ரஸல் அவட்யவ் தெரிவித்திருந்தார். எனினும், 14பேரே பலியானதாக உறுதிசெய்யப்பட்டது.


தாக்குதலில் காயமடைந்த 145பேரில் 45பேரின் நிலை மிகக் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

தீவிரவாதம் பற்றிப் பேச்சு நடத்துவதற்காக அமெரிக்க வெளி விகார அமைச்சர் கொலின் பவல் ரஷ்யாவுக்கு சென்றுள்ள இந்த நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவின் ஒரு பகுதியான செச்சினியாவில் தனிநாடு கோரி இஸ்லாமியத் தீவிரவாத இயக்கங்கள் போராடி வருகின்றன. தற்போது செச்சினியா ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருப்பதனால், அங்கு அவர்கள் தீவிரவாதத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த திங்களன்றும் ஒரு தாக்குதல் இடம்பெற்றது. இதில் 59 பேர் உயிரிழந்தமை தெரிந்ததே. (ம)

உலக அரங்கில்

# ரயில் தீப்பற்றி எரிந்ததில் 38 பேர் கருகி மாண்டனர்



விபத்தில் காயமடைந்த அல்லது உயிரிழந்தவர்களின் விவரங்களை பெறும் தொலை பேசி இலக்கங்களை அறிவித்பு பலகையில் எழுதும் ரயில்வே நிலைய ஊழியர்..

புதுடில்லி,மே16

இந்தியாவின் வட மாநிலமான பஞ்சாப்பில் பயணிகள் ரயில் ஒன்று நேற்றுத் தீப்பற்றி எரிந்ததில் குறைந்தது 38பேர் உடல் கருகி மாண்டனர். மேலும் 12பேர் தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.

லூடியானா என்ற ரயில் நிலையத்தை விட்டு ரயில் புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்தப் பயங்கரம் இடம்பெற்றது. அமிர்தசரஸில் இருந்து மும்பாய் நோக்கிச் சென்ற ரயிலே இந்த அனர்த்தத்துக்கு உள்ளானது.

உயிரிழந்தவர்களில் குறைந்தது 10 பேர் குழந்தைகளாவர்.

அணைக்காமல் வீசப்பட்ட சிகரெட் ஒன்றே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

தீப்பற்றி எரிந்த பெட்டிகளில் இருந்து 20 பேர் மீட்கப்பட்டனர். அவர்களிடம் அதிகாரிகள் விசாரணைகளை நடத்தினர்.

அப்போது சாட்சியம் அளித்த ஒரு பயணி அதிகாலை 3 மணியளவில் ஒருவர் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்து விட்டு, அதனை அணைக்காமல் வீசியதாகவும் அதனாலேயே தீ பரவியதாகவும் தெரிவித்தார். வேகமான காற்றுக் காரணமாக தீ விரைவில் ஏனைய பெட்டிகளுக்கும் பரவிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தீ பரவ ஆரம்பித்ததும் ரயிலில் இருந்த சிலர் அந்தப் பெட்டிகளின் இணைப்பை ஏனையவற்றில் இருந்து துண்டித்து விட்டனர். இதனால், தீ ஏனைய பெட்டிகளுக்கும் பரவாமல் தடுக்கப்பட்டது. இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் முக்கிய பங்காற்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

"தீப்பிடித்த பெட்டியின் இரு பக்க வாசல்களிலும் பயணிகள் தமது பொதிகளைக் குவித்து வைத்திருந்தனர். எனவே, தீ பெட்டியை சுற்றிவளைத்ததும் பயணிகள் எவரும் தப்பிச் செல்ல முடியவில்லை. நாங்கள் எவ்வளவோ முயன்றும் சில பெண்களையும் குழந்தைகளையும் தான் காப்பாற்ற முடிந்தது.

"பெட்டிக்குள் புகைமூட்டமாக இருந்ததனால், அதன் மையப் பகுதிகுள் செல்ல முடியவில்லை. எனவே, திணறிக் கொண்டிருந்த சிலரை மீட்டு வாசலில் மறித்தபடி வைக்கப்பட்டிருந்த பொதிகளுக்கு இடையில் நுழைத்து வெளியே தள்ளினோம்" - என்று இராணுவத்தைச் சேர்ந்த ஏ.டி.சிங் என்பவர் தெரிவித்தார். (ம)

# வடகொரியாவின் அணுத் திட்டம் பற்றி அமெ.-தென்கொரிய தலைவர்கள் பேச்சு

வாஷிங்டன்,மே16

வடகொரியாவின் அணுவாயுத உற்பத்தியை எப்படித் தடுப்பது என்பது குறித்து அமெரிக்க அதிபரும் தென்கொரிய அதிபரும் நியூயோர்க்கில் பேச்சு நடத்தியுள்ளனர்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு அமெரிக்கா வந்த தென்கொரிய அதிபர் றோ மூ-ஹூனும் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் புதனன்று இது குறித்துப் பேச்சு நடத்தினர்.

தமக்கிடையிலான பரஸ்பர நட்புறவின் மூலம் வடகொரியாவுடனான பிணக்குக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும், அதன் மூலம் வடகொரியாவுடனான 50 வருடகால நட்புறவை பேணிக் கொள்ளவேண்டுமெனவும் இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னர் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய புஷ் "என்னுடைய மனதிலே மாறுபாடான எண்ணம் எதுவும் இல்லை. எமக்கிடையேயுள்ள அன்பான பிரத்தியேகமான நட்புறவின் மூலம் சுதந்திரமான முறையில் பெரிய பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்த்துக் கொள்ள முடியும்" - என்றார் புஷ்.

வடகொரியா அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது. இந்த விடயத்தில் எப்படியும் தாங்கள் ஒரு சுமுகமான தீர்வினை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை தமக்கு இருக்கிறது என்பதாக இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா மூலம் இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமும் பொருளாதார ரீதியில் அதனை நெருக்குவதன் மூலமும் அதனை வழிக்குக் கொண்டுவரலாம் என அமெரிக்கா இந்தச் சந்திப்பில் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்த நடவடிக்கை அபாயகரமானது என்று தென்கொரியா தெரிவித்ததுடன், அந்தத் திட்டங்களையும் அடியோடு மறுத்துவிட்டது. அரசியல் இராஜதந்திர முயற்சிகள் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் நம்புவதாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது.



தென்கொரிய அதிபருடன் புஷ்

# சவூதிக்கு அமெ. முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தது

றியாத்,மே16

சவூதி அரேபியாவில் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்துவார்கள் என்று அங்கு தற்கொலைத் தாக்குதல் நடைபெறுவதற்கு சில நாள்களுக்கு முன்பாக அமெரிக்கா விசேட தூதுவர் மூலம் எச்சரிக்கை விடுத்திருந்தது என்று புதனன்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சொந்த நாட்டிலேயே தீவிரவாதிகள் இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் மூலம் தாக்குதல் நடைபெறலாம் என்பதையும் நாம் சவூதிக்குத் தெரியப்படுத்தியிருந்தோம் என்கின்றார்கள் அமெரிக்கர்கள்.

றியாத்தில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்கள் குறித்தே அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அவர்கள் முன்வர வேண்டும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

## சவூதி குண்டு வெடிப்பின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள்

றியாத்,மே16

சவூதி அரேபியாவில் திங்களன்று இடம்பெற்ற தொடர்குண்டு வெடிப்புக்களுக்கு அல்கெய்டாவுடன் தொடர்புடைய வெளிநாட்டு சக்திகளின் ஆதரவு இருந்தது என்று சவூதி அதிகாரிகள் கூறுகின்றனர். அவர்களைத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

அமெரிக்க எவ்.பி.ஐ அதிகாரிகளும் சவூதி அதிகாரிகளுடன் விசாரணைகளில் இணைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வீரத்தாயின் புதல்வர்கள் ஈழமண்ணிலேயே உள்ளனர்

## தமிழகப் பேராசிரியர் சதாசிவம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே16

புறமுதுகு காட்டாத வீரத்தாயின் புதல்வர்கள் இந்த ஈழத் தமிழ் மண்ணிலேயே உள்ளனர். இங்குதான் தமிழ் வீரம் நிலைத்து நிற்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ் நாட்டின் பேராசிரியரும் பன்மொழிப் புலவருமான மு.சதாசிவம்.

நல்லை ஆதீன மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாட்டின் மாலை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சைவப் புலவருமாகிய திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீரத்தின் விளைநிலமாக ஈழமே உள்ளது. இங்குதான் தமிழ் வீரம் நிலைத்து நிற்கின்றது. தமிழ் நாட்டில் இந்த வீரமரபு குறைந்துவிட்டது. ஈழத்தின் இந்த வீரமரபு குறித்து நாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். புறநானூறு கூறும் வீரம் இதுதான்.

நாம் எல்லோரும் நக்கீரர் பரம்பரையில் வந்த புலவர்கள். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று வாதிட்டார் நக்கீரர். அதுபோன்று எமது குறையை மாணவர்கள் சுட்டிக்காட்டும் சமயத்தில் அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் எம்மிடம் இருத்தல் வேண்டும். குறையைப் பற்றிச் சொன்ன மாணவனுக்கு நன்றி கூறிவிட்டு எமது குறையை நாம் திருத்திக் கொள்ளவேண்டும்.

இது போன்றுதான் புலவர்களாகிய நாம் ஏனைய புலவர்கள் விடுகின்ற பிழைகளையும் சுட்டிக்காட்டவும் வேண்டும். அதனை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். குறைகள் உள்ளவருடன் பழகுவதைவிடுத்து குணம் உள்ளவருடன் பழகவேண்டும். யாருடன் நாம் பழகுகின்றோமோ அவரின் பழக்க வழக்கங்கள் எமக்கும் வந்துவிடும்.

நற்றவம் செய்தால் நல்ல மனைவியை அடையலாம். நல்ல பிள்ளைகளைப் பெறலாம். இக்காலத்தில் நல்லதொரு வேலைக்காரன் கிடைப்பதே அரிது. அந்தளவிற்கு நற்றவம் செய்வோர் எண்ணிக்கை குறைந்து விட்டது.

கற்பு என்று காலாதிகாலமாகக் கதைக்கின்றோம். பெண்களுக்கு மட்டுமா கற்பு? ஆண்களுக்கு அது தேவையில்லையா? ஆண்கள் நல்லவர்களாக நடந்து கொண்டால் பெண்களும் அதன்படி நடப்பார்கள்.

பெண்ணுக்குச சம உரிமை வழங்கிய முதல் மனிதன் (இறைவன்) சிவபெருமான்தான். தான் தனது உடலிலேயே சரிபாதியைக் கொடுத்தவன் அவன்தான். ஆனால், இன்றும் ஆண், பெண் சம உரிமை பற்றி நாம் பேசிக் கொண்டிருப்பது விந்தையாக உள்ளது - என்றார். (எ-10)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567

(C/27865)


### வெள்ளரசு மரத்தைச் சுற்றி தங்கமுலாம் பூசப்பட்ட வேலி பிரதமர் திறந்து வைத்தார்

கொழும்பு,மே16

அநுராதபுரத்திலுள்ள புனித வெள்ளரசு மரக்கிளையைச் சுற்றி மூன்றரை கோடி ரூபா செலவில் இரண்டாவது தங்கமுலாம் பூசப்பட்ட வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தங்க வேலியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அரச மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மதகுருமார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-4)

### பாலைப்பழம் நகரில் விற்பனை

அரியாலை,மே16

நீண்டநாள் இடைவெளிக்குப் பின்னர் பாலைப்பழம் யாழ்.நகரப் பகுதியில் விற்பனை செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

பாலைப்பழக் காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து வன்னிப் பகுதியில் இருந்து கடக பெட்டிகளில் இவை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

கொட்டடி, குருநகர் சந்தைகளிலும் இந்தப் பாலைப்பழம் விற்கப்படுகின்றன. (ம-17)

### மீன்விலை அதிகரிப்பு

அரியாலை,மே16

யாழ்நகரில் மீனின் விலை கடந்த சில நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

கொட்டடி, பாஷையூர், குருநகர் போன்ற மீன் சந்தைகளிலேயே மீனின் விலை அதிகரித்து காணப்படுகின்றது.

மேற்படி சந்தைகளில் இருந்து வாகனம் மூலம் தென்பகுதிக்கு மீன் ஏற்றுமதி செய்யப்படுவதும் மீனின் விலை அதிகரிப்புக்கு காரணம் எனறு தெரிவிக்கப்பட்டது. (ம-17)

### புலவர் மாநாடு மூன்றாம்நாள் நிகழ்வுகள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன பொது மண்டபத்தில் நடைபெற்றுவரும ஈழத்து தமிழ்ப்புலவர் மாநாட்டின் மூன்றாம் நாளான இன்று அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

காலை 8.30மணி முதல் 9.30 மணி வரை ஈழத்துப் பூதத்தேவனாருக்கு ஈழத்தமிழர் ஆண்டு தோறும் மாநாடு எடுக்க வேண்டும் எனக்கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

தொடர்ந்து அருள் வேண்டல், தமிழ வாழ்த்து ஆகியன இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் சித்தாந்த பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும். அருள் வேண்டல், தமிழ் மொழி வாழ்த்துரை, அருளுரை, தமிழ்ப் பேறிஞர்களைக் கௌரவித்தல், பரிசளிப்பு என்பன இடம்பெறும். (எ-ரி)


## வெள்ளி விழா வாழ்த்துக்கள்



நயினாதீவைச் சேர்ந்த

**திரு.நா.க.குமாரசூரியர் J.P.**

(சமாதான நீதிவான், அஞ்சலதிபர், நயினாதீவு)

**திருமதி காந்திமலர் – குமாரசூரியர்**

தம்பதிகள்

கண்ணின் மணிபோல எங்களைக் கனிவுடன் வளர்த்து, எங்கள் உயர்ச்சிக்கும், நல்வாழ்வுக்கும் உறுதுணையாக இருக்கும் எங்களருமை அப்பாவையும், அம்மாவையும் திருமண வாழ்வின் 25 ஆவது ஆண்டு நிறைவில் இன்று வெள்ளிவிழாக் காணும் இந்நன்னாளில், உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

42, பிரம்படி லேன்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

- பிள்ளைகள்.

(17993)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
30 - 06 - 1929



உதிர்வு
16 - 04 - 2003

**அமரர் வயிரமுத்து பொன்னுத்துரை**

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (16.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

(C/277925)

- குடும்பத்தினர்.



## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தாயகத்தில்
21 - 03 - 1974



தாயக விடிவுக்காய்
16 - 05 - 1997

**சண்முகம் ஈஸ்வரன்**

*(மேஜர் குட்டி)*

தாயகத்து மண்ணில் தமிழீழம் வேண்டி
தலைவன் வழியில் நின்ற வீரனே!
ஜெயம் கொண்டு எழுந்த பகைவனை
'ஜயசிகுறு'வுடன் முடிவுகண்ட தீரனே!
'குட்டி' எனும் பெயருடன்
தமிழீழத்தின் விடிவுக்காய் மரணித்த வீரனே!
உன்னை நினைத்து கண்கள் சொரிகிறது
கண்ணீரை!
எழுந்துபார் தமிழீழத்தின் விடிவை!

உன் பிரிவால் துயருறும்:
பாஸ்கரன் குடும்பம்,
முத்துலிங்கம் இராசன் (தம்பி)
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

முதலியார் கோவிலடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(18004)



## ஈராண்டு நினைவினில் ஓயாத நினைவுகளால்.....

மண்ணில் உயிர்ப்பு
21 - 06 - 1917



விண்ணின் அழைப்பு
08 - 06 - 2001

**அமரர் கார்த்திகேசு தம்பு செல்லத்துரை**

(சடாசிவம், போமன்)

(இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர்,
அரசாங்க சிறுகைத்தொழில் கூட்டுத்தாபனம், கொழும்பு)

திதி:17-05-2003

ஐயா.....

அன்பென்னும் வார்த்தையின் அகராதியும் நீரே!
பண்பெனும் வார்த்தைக்கு வழிகாட்டியும் நீரே!
எல்லோரினதும் மனதில் ஒளியாய் வாழ்ந்தவரும் நீரே!
இன்று இறைவன் அடிசேர்ந்து ஈராண்டாயினும்
உங்கள் நினைவுகள் எம் கண்ணைவிட்டு கலையுவில்லை!

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
மனைவி,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீனாட்சி அம்மன் கோவில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(17920)



## மரண அறிவித்தல்

**திருமதி கந்தையா இலட்சுமி**

கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி கந்தையா இலட்சுமி அவர்கள் 12.05.2003 திங்கட்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் அரியரட்ணம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), விஜயரட்னம் (பிரதேச முகாமையாளர், அரசாங்கமரக் கூட்டுத்தாபனம்), கமலாதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (லண்டன்), பஞ்சரட்ணம் (நில அளவையாளர், திருகோணமலை), பரமேஸ்வரி (ஜேர்மனி), கனகரட்ணம் (ஜேர்மனி), இராசரட்ணம் (லண்டன்) மகேஸ்வரி, சீவரட்ணம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சவுந்தரி ரஞ்சிதமலர், ஜெகதீஸ்வரன், செல்லத்துரை, கௌரி, லிங்கம், யுத்தா, வாசுகி, மகேந்திரன் (ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி) ரமணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.05.2003 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிங்கராயர் வீதி,
புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(18006)

தகவல்:-
லயன் விஜயரட்ணம்
(பிரதேச முகாமையாளர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்)

உதயன்

# நல்லதொரு சகுனம்

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்த அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா தனது விஜயத்தின் முடிவில் இங்குள்ள நிலைமை தொடர்பாக சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்.

அவற்றில் பெரும்பாலானவை வழமைபோல அமெரிக்காவின் சர்வதேசப் பொலீஸ்காரத்தன எண்ணத்தில் அமைந்தவை என்றாலும், இதுவரை தான்கண்டுகொள்ள மறுத்துவந்த ஒரு விடயத்தையும் அமெரிக்கா இப்போது புரிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கின்றது என்பது அவரது கருத்துக்களில் வெளிப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இலங்கையின் இனப்பிரச்சினை இன்று, நேற்றுத் தொடங்கியதல்ல. இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலேயே பிரச்சினை உருவாகிவிட்டது. ஐந்து தசாப்தங்களுக்கு மேலான சரித்திரம் கொண்ட இந்த இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலமும் அமைதி வழியிலும் தீர்வு காண்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் பல தடவைகள் முயன்றனர். ஆனால், ஒவ்வொரு தடவையும் சிங்களப் பேரினவாதத்தால் அவர்கள் ஏமாற்றப்பட்டார்கள். ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசு, தமிழர்களுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டியதில் பத்தில் ஒன்றைத் தன்னும் வழங்க முன்வந்த சமயங்களில் எதிர்க்கட்சியிலிருக்கும் பேரினவாத சக்திகள், இனவாதக் கூச்சலைக் கிளப்பி அந்த முயற்சிகளை முறியடித்தன.

சமாதான முறையில் - அமைதி வழியில் - தங்களின் நியாயமான அபிலாஷைகளை அடைய முடியாது என்பதையும், சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு முன்னால் தாங்கள் கைக்கொண்டுவரும் அஹிம்சைப் போராட்டம் சாத்தியமற்றது, வலுவற்றது என்பதையும் தமிழர்கள் உணரத் தலைப்பட்டனர். அதன் விளைவே ஆயுதப் போராட்டம்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முகிழ்வதற்கு அடிப்படையாக இருந்த இந்தக் காரணத்தைப் புரிந்து கொள்ளவிரும்பாது - புரிந்தும் புரியாதது மாதிரிக் காட்டிக்கொண்டு - தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களுக்கு எதிராகக் கருத்து வெளியிட்டு வந்த அமெரிக்கா, இப்போது தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்குக் காரணமாக இருந்த அடிப்படையைப் புரிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு உரியதை வழங்குவதில் சிங்களத் தலைமைகள் எப்போதுமே பிளவுபட்டு நின்று குழப்பி வந்துள்ளன என்பது இப்போதாவது அமெரிக்காவுக்குப் புரியத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கதே.

இலங்கை அரசும், எதிரணிக்குத் தலைமை வகிக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் தங்களின் அரசியல் சகவாழ்வைக் கேள்விக்குள்ளாக்கி, பெரும் அரசமைப்பு நெருக்கடியைத் தோற்றுவித்து மோதிக் கொண்டிருக்கின்றனர். இந்த அரசியல் தலைமைத்துவப் பிளவு, சிங்களத் தலைவர்களிடையேயான கருத்து வேறுபாடுகளால் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணபதற்கான அமைதி முயற்சிகள் முன்னர் முறியடிக்கப்பட்டமை போன்று, இப்போதும் நடக்கச் செய்து விடும் என்ற அச்சத்தைத் தோற்றுவித்திருக்கின்றன.

எனவே, இந்த அரசியல் - அரசமைப்பு - நெருக்கடி காரணமாக, புலிகளுடனான தற்போதைய சமாதான முயற்சிகள் முறிவடைய அனுமதிக்கக் கூடாது என்று பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் எச்சரித்திருக்கின்றார் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் தற்போதைய சமாதான முயற்சிகளின் விடயத்தில் ஒரு தரப்பான தமிழர்கள் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு, கட்டமைப்பு ரீதியாக ஒன்றுபட்டு, தங்களின் அதிகாரபூர்வப் பிரதிநிதிகளான புலிகளின் பின்னால் திரண்டு நிற்கின்றார்கள்.

ஆனால், மற்றைய தரப்பான சிங்கள மக்களின் அரச அதிகார மையம், இரண்டுக்கு மேற்பட்ட - ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற - பல துண்டுகளாகப் பிரிந்து நிற்கின்றது.

இதுவே, தற்போதைய சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்கு இடைஞ்சல் விளைவிக்கும் பல முட்டுக்கட்டைகளை உருவாக்குகின்ற அடிப்படைக் காரணியாக அமைந்திருக்கின்றது.

இதனைப் புரிந்துகொள்ள அமெரிக்கா முற்பட்டிருப்பது நல்லதொரு சகுனம்தான்.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடி:

# கூட்டுறவு பிரதி அமைச்சருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை!

மட்டக்களப்பு,மே16

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டதாகக் கூறி கூட்டுறவு பிரதியமைச்சர் முகைதீன் அப்துல் காதருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்று அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி ஏறாவூரைச் சேர்ந்த ஒரு நபரிடம் பல லட்சம் ரூபாகளைப் பெற்றுக்கொண்டு அவரை ஏமாற்றிவிட்டதாக நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தன்னை வெளிநாட்டுக்கு அனுப்பாதது மட்டுமன்றி தான் கொடுத்த பணத்தையும் அமைச்சர் திருப்பி வழங்க மறுத்து விட்டதாக அந்த நபர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நான்கு தடவைகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆனால்,அமைச்சர் சார்பில் எவரும் நீதிமன்றில் ஆஜராகவில்லை. இதனை அடுத்தே நீதிமன்றம் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

(ம)

## நாட்டு நடப்பு

### கேசத்தின் மாண்பு கேள்மின்

நல்ல குலம் நல்ல பண்பு
நல்ல இடத்துப் பையன்தான்
கல்வி கேள்வி ஞானமதில்
கரைகடந்த பண்டிதன்
பல்கலைக் கழகம் தன்னில்
பட்டம் பலவும் பெற்றவன்
நல்ல பல மணங்கள் பேசி
நாளும் வீடுதேடி வருகின்றார்
மெல்ல தலை வழுக்கையென்று
மெல்லியர்கள் வெறுக்கின்றார்
நல்ல பண்பு மிக்க இவரை
நங்கையர் நீர் வெறுப்பதேன்?
மெல்ல உதிரும் கேசத்துக்கு
மேன்மையேது பெண்களே!

- விகடகவி

# மீளக் குடியமர உதவுமாறு அலிகம்ப மக்கள் கோரிக்கை

## புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது விடுத்தனர்

மட்டக்களப்பு,மே16

அம்பாறை மாவட்டத்திலுள்ள அலிகம்ப என்ற கிராமவாசிகள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர உதவுமாறு விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் வசித்த வனக்குரவர் இனத்தவர்கள் யுத்த நடவடிக்கைகள் காரணமாக 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்திருந்தனர். கடந்த 13ஆண்டுகளாக அடிப்படை வசதிகள் கூட இல்லாத அகதி முகாம்களில் இவர்கள் வசித்து வந்தனர்.

அரசோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ, [illegible]கள் விடயத்தில் எந்த அக்கறையும் எடுக்கவில்லை[illegible]த தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளதையடுத்து தமது கிராமத்தில் மீளக்குடியமரும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். தமது காணிகளைத் துப்புரவு செய்யும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், சிறப்புத் தளபதி த.ரமேஸ் ஆகியோர் அவர்களது இடத்தைச் சென்று பார்த்து அவர்களுடன் உரையாடினர். அப்போது அவர்களிடம் தமது மீள்குடியமர்வுக்கு உதவுமாறு கிராமவாசிகள் கோரிக்கை விடுத்தனர்.

தமது கிராமத்தின் அவல நிலையைக் கருத்திற்கொண்டு தமக்கு உதவும்படி அவர்கள் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

# யுத்த அழிவுகள் நிறைந்த மண்ணில் கல்விக்கூடங்கள் மீண்டும் இயக்கம்

## வரவேற்கத்தக்கது என்கிறார் பளைக் கோட்டக் கல்விப் பொறுப்பாளர்

தென்மராட்சி,மே16

யுத்த அழிவுகள் நிறைந்த மண்ணில் கல்விக் கூடங்கள் மீள இயங்க ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கதாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் தென்மராட்சி மற்றும் பளைக் கோட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலன்.

வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையின் ஆரம்பப் பிரிவு அதன் சொந்த இடமான இத்தாவிலில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஏ-9 கண்டி வீதி ஊடறுப்பு சமர் மற்றும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட அக்கினிச் சுவாலை நடவடிக்கைக்கு எதிராக புலிகள் நடத்திய முறியடிப்புச் சமர் ஆகிய இரண்டு சமர்களினதும் மையமாகத் திகழ்ந்த இத்தாவில் மண்ணில் பாடசாலை மீண்டும் திறக்கப்படுவது பெருமகிழ்ச்சியைத்தருகிறது.

இத்தாவில் மண்ணானது புலிகளின் இரத்தம் சிந்தப்பட்ட மண்ணல்ல. புலிகளின் இரத்தத்தால் ஊறி உரமான வீர வரலாறு படைத்த மண். ஸ்ரீலங்காப் படைகளிற்கு புலிகளின் பலத்தை உணர்த்திய மண். இன்றைய சமாதான முன்னெடுப்பிற்கு ஸ்ரீலங்கா அரசை ஊக்கப்படுத்திய காரணிகளில் ஒன்றாய் அமைந்த மண். இந்த இடத்தில் விதையாகிப் போன மாவீரர்களின் ஈகம்தான் இன்று நாம் இவ்விடத்தில் நிமிர்ந்து நிற்பதற்கு வழிவகுத்தது.

சொந்த இடத்திலிருந்து விரட்டப்பட்ட மக்களாகிய நீங்கள் பிறந்து, தவழ்ந்து, ஓடித்திரிந்த மண்ணிலே மீண்டும் நிம்மதியாக கால்பதிக்கக் காரணியாக அமைந்த மாவீரர்களின் தியாகத்தை மதித்து அவர்களின் இலட்சியம் ஈடேற நாம் அனைவரும் கடுமையாக உழைக்கவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் சி.இராமலிங்கம், பளைக் கோட்டக் கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை, பளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தா.சுவாமிநாதன், பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வதனராசா, கிராம அலுவலர் க.ஆறுமுகம் உட்பட பலரும் உரையாற்றினர்.

(எ-117)

# பாரிய விமான எரிபொருள் குதம் கட்டுநாயக்காவில் அமையும்

## ரூபா 90கோடி முதலீடு

கொழும்பு,மே16

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாரிய எண்ணெய் குதம் ஒன்றினை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

விமானங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் இத்திட்டத்திற்காக 90கோடி ரூபாவை அரசு முதலீடு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் விமானங்களுக்கு எரிபொருளை விநியோகஞ் செய்யும் ஏனைய உலக நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது மூன்று நாள்களுக்குத் தேவையான விமான எரிபொருள் மட்டுமே கட்டுநாயக்காவில் களஞ்சியப்படுத்த முடியும். இத்திட்டத்தின் மூலம் சுமார் ஒன்பது நாள்களுக்குத் தேவையான விமான எரிபொருளை அங்கு களஞ்சியப் படுத்த வாய்ப்பு ஏற்படுமெனவும் -

அதன்படி மேலதிகமாக மூன்று புதிய எண்ணெய்க் குதங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(எ-9)

### நாளை

வைகாசி 03
சனிக்கிழமை
17.05.2003
திதி : பிரதமை
முற்பகல் 7.30 வரை
நட்சத்திரம் : அனுஷம்
நண்பகல் 12.10 வரை
சுபநேரம் : 2.53 - 4.23
ராகுகாலம் :8.53 - 10.23
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

மனம்தான் சொர்க்கத்தையும் நரகத்தையும் படைக்க வல்லது.

# சுகாதார எழுதுநர் பதவியுயர்வு அமைச்சு சுற்றறிக்கை கிடைத்தது

பதவிப் பெயர் மாற்றம், சம்பள உயர்வு போன்ற 5கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுகாதார எழுதுவினைஞர் சேவைச் சங்கத்தினரின் கோரிக்கைகளை சுகாதார அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றையும் சுகாதார அமைச்சு நாட்டில் உள்ள சகல ஆஸ்பத்திரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது. அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முன்னர் சுகாதார எழுதுவினைஞர் சேவை என இருந்த பதவிப்பெயர் தற்போது சுகாதார முகாமைத்துவ உதவியாளர் சேவை என மாற்றப்பட்டுள்ளது. பொது எழுதுவினைஞர் சம்பளத்திலும் பார்க்க இவர்களின் சம்பள அளவு மூன்று சம்பள ஏற்றத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இப்பதவிக்குரிய கல்வித் தகைமையும் ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தி அல்லது பல்கலைக்கழக பட்டதாரி எனவும் மாற்றப்படுகிறது.

அத்துடன், பதவிக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு வைத்தியசாலை நிர்வாகம், மருந்துக் களஞ்சிய முகாமைத்துவம், வைத்தியசாலை உபகரணங்கள் பற்றிய அறிவு, முகாமைத்துவம், சிங்களம் அல்லது தமிழ்மொழி அறிவுடன் ஆங்கிலமும் கற்பிக்கப்படுவதுடன் 6மாதகால பயிற்சியும் அளிக்கப்படும்.

நிரந்தர நியமனம் பெற்று மூன்று வருடத்திற்குள் தட்டச்சு, கணனி ஆரம்ப அறிவு இரண்டிலும் சித்திபெறவேண்டும். தவறின் இவர்களுக்கான சம்பளஏற்றம் தடைப்படுத்தப்படும்.

இவற்றுடன் ஆரம்பவகுப்பு, தரம் II, தரம்I, விசேடதரம் என நான்கு பிரிவுகளில் பதவியுயர்வுகள் வழங்கப்படும். இதில் விசேட தரத்திலுள்ளவர்கள் வேலைசெய்யும் இடங்களைப் பொறுத்து நிர்வாக உத்தியோகத்தராகவோ, செயலாளராகவோ கடமை புரியலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-15)

# 'கொரோனா' வைரஸை இனங்கண்டவரையே பலிகொண்டது 'சார்ஸ்' நோய்

**உலகெங்கிலும் பரபரப்பாகப் பேசப்படும் 'சார்ஸ்' தொற்று நோய் நம் நாட்டிலும், ஏன், யாழ். மாவட்டத்திலும் பரவியுள்ளதா எனச் சந்தேகிக்கப்படும் இன்றைய நிலையில் அதன் வரலாறு குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. நோயை உண்டாக்கும் வைரஸைக் கண்டு பிடித்த வரையே கொன்றது சார்ஸ்.**

கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் சீனாவின் 'குவங்டொங்' பிரதேசத்தில் மிக வேகமாகப் பரவத் தொடங்கிய மூச்சுத்திணறல் நோய் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் பரவத் தொடங்கியமை வைத்தியத்துறையினரால் அவதானிக்கப்பட்டது.


வியட்நாம் 'ஹனோய்' நகரில் உள்ள 'பிரெஞ்ச் ஹொஸ்பிற்றல்' எனப்படும் பிரான்ஸ் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 48 வயதுடைய சீன - அமெரிக்க வர்த்தகரொருவர் இம் மூச்சுத் திணறல் நோய்க்கு உட்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வர்த்தகர் அவ்வேளையில் ஹொங்கொங்கிலிருந்து ஹனோய்க்கு வந்திருந்தார். சுகவீனமுற்ற நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு கடும காய்ச்சல், இருமல், வயிற்றுவலி மற்றும் மூச்செடுப்பதற்குச் சிரமம் ஆகிய நோய் அறிகுறிகள் ஏற்பட்டிருந்தன. அவருடைய அண்மைக்கால நடமாட்ட வரலாறு பற்றி ஆராய்ந்தபோது, அவர் மிக அண்மைய காலத்தில் சீனாவின் 'ஹுவங்டொங் ஷங்காய்' மற்றும் 'மாகோவ்' ஆகிய பிரதேசங்களில் தங்கியிருந்தமை தெரிய வந்தது.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி வரையிலும் 'ஹனோய்' நகரிலுள்ள குறிப்பிட்ட பிரெஞ்சு வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியத் துறைசார் ஊழியர்களில் 22 பேர் வரையில் மேற்கூறிய வர்த்தகருக்கு ஏற்பட்டிருந்த நோயின் தன்மையை ஒத்த நோய் அறிகுறிகளுக்கு உட்பட்டனர். இவ் 22 பேரில் இருபது பேர் நியூமோனியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய இருவரது நிலை மிக மோசமடைந்திருந்தது.

இது தொடர்பான வைத்திய ஆய்வுகளை கார்லோ உர்பானி என்ற டாக்டர் மேற்கொண்டு வந்தார். அவர் உலக சுகாதார நிறுவனத்தின தொற்று நோய்கள் தொடர்பான துறைசார் வல்லுநராவார். வியட்நாமிலுள்ள உலக சுகாதார நிறுவனத்தின கிளைக் காரியாலயத்தினூடாக அவர் அப் பிரெஞ்சு வைத்தியசாலையில் பரவிவந்த மூச்சுத் திணறல் நோய் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

அவ்வைத்தியசாலையில் சிகிச்சை



பெற்றுவந்த அச் சீன - அமெரிக்க வர்த்தகரின் மூலமே அந்நோய் அந்த 22 ஊழியர்களையும் தொற்றிக் கொண்டது. அந்நோயின் குணவியல்புகள் கொண்ட நோயினால் பாதிப்புற்ற அநேகரை சீனாவின் ஹுவாங் டொங் மற்றும் ஹொங்கொங் ஆகிய பிரதேசங்களில் பலர் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக டாக்டர் கார்லோ உர்பானி அறிந்துகொண்டார்.

ஹொங்கொங்கிலிருந்து சிங்கப்பூர் மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கும் இத்தொற்று நோய் பரவிவந்தமையை டாக்டர் அறிந்து கொண்டார். இவ்விடயத்தில் எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தால் இந்நோய் அடுத்த சில வாரங்களில் உலகம் பூராகவும் பரவிவிடுமென்பதை டாக்டர் கார்லோ உர்பானி தமது அனுபவ மூலம் உணர்ந்து கொண்டார்.

இதுபற்றி உடனடியாக அவர் உலக சுகாதார நிலையத்துக்குத் தகவல் அனுப்பி வைத்தார். அவரது அத்தகவலைத் தொடர்ந்து உலக சுகாதார நிறு[illegible] விரைந்து நடவடிக்கையி[illegible]ங்கியது. உலகத்தையே அச்சுறுத்தும் வகையில் பரவிவரும் இத்தொற்று நோயை 'சார்ஸ்' எனப் (Severe Acute Respriatory Syndrome) பெயரிட்டு உலக சுகாதார நிறுவனம் அழைத்தது. இத்தொற்றுநோய் குறித்து மிக விழிப்புடன் செயற்படுமாறு உலக நாடுகள் அனைத்துக்கும் வேண்டுகோள் விடுத்ததோடு, உலக சுகாதார நிறுவனம் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களையும் பெரிய அளவில் ஆரம்பித்தது.



குடாநாட்டிலும் வருமா இந்த நிலை!

ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரிவே உலக சுகாதார நிறுவனம் என்ற பெயருடன் இயங்கி வருகிறது. சுவிற்சர்லாந்து நாட்டின் 'ஜெனீவா' நகரத்தில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது. பல்வேறு நாடுகளிலும் அமைந்துள்ள தனது கிளைக் காரியாலயங்களூடாக அவ்வவ் நாடுகளில் பொதுச் சுகாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றது. உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் உருவாகும் தொற்றுநோய்கள் தொடர்பான அச்சுறுத்தல்களுக்கு முதன்மையளித்து, அவற்றை இனம் கண்டு, கட்டுப்படுத்திப் பொதுமக்களை நோய் நொடியினின்றும் காக்கும் பணியை இவ் உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

சீனாவின் 'ஹுவாங்டொங்' பிரதேசத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாத முதல் பொது மக்களைப் பீடித்த இம்மூச்சுத் திணறல் நோய் 'சார்ஸ்' நோயேயெனக் கண்டறிந்து உறுதி செய்யப்பட்டது இவ்வாண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதியன்றேயாகும். உலக சுகாதார நிறுவனத்தின் உயர் மட்ட நிபுணர்கள் ஐவர் அடங்கிய குழுவொன்று சீன நாட்[illegible]யணம் மேற்கொண்டு பல [illegible] ஆய்வுகளை நடத்திய பின்[illegible] கையளித்த அறிக்கையின் பிரகா[illegible]ம் இவ்வகை நோய் 'சார்ஸ்' நோய்த் தாக்கமே என உறுதி செய்யப்பட்டது.

'சார்ஸ்' என அழைக்கப்படும் புதியதொரு கொடிய தொற்று நோய் உலக நாடுகள் பலவற்றில் வேகமாகப் பரவிவருவதை முழு உலகமும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாக இவ்வாண்டு ஏப்ரல் மாதமளவில உலகத்துப் பொதுமக்கள் ஊடகங்கள் தகவல் வெளியிட்டன.

இதனைத் தொடர்ந்து, பொது மக்கள் பெருமளவில் கூடும் இடங்களில், பொதுமக்கள் வாயையும் மூக்கையும் மறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு முகமூடிகளை அணிந்து நடமாடுவது போன்றும், பாதுகாப்பு முகமூடிகள் அணிந்த வண்ணம் பாடசாலை வகுப்பறைகளில் மாணவர்கள் கல்வி கற்பது போன்றும், பத்திரிகைகளில் படங்களை வெளியிட்டும், தொலைக் காட்சி ஒளிபரப்புக்கள் மூலமும் ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் 'சார்ஸ்' தொற்றுநோய்ப் பாதுகாப்புப் பற்றி பிரசாரம் மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளை இத்தொற்று நோய்த் தடுப்புப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் சுகாதார அதிகாரிகள் தாமும் இப் பாதுகாப்பு முகமூடிகளை அணிந்தவாறு கடமையில் ஈடுபடுவதை வர்ண தொலைக்காட்சி ஒளிபரப்பில் காண முடிகிறது.

இத்தொற்றுநோய் வாய், மூக்கு மற்றும் ஸ்பர்சம் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தும் சுவாசிப்புக் காற்று, இருமல், துப்புதல் மற்றும் தொடுதல் ஆகியவற்றின் மூலமும் உட்கொள்ளும் உணவு வகைகளூடாகவும் விரைவாகத் தொற்றிக் கொள்வதாகக் கண்டறியப்பட்டிருப்பதால் இவ்வித பாதுகாப்பு முகமூடி அணிந்து நடமாடும் தற்காப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் பல நாடுகளைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களின் உதவியுடன் இத் தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டதுடன், இத்தொற்று நோய்க்குக் காரணமான கிருமி எதுவெனக் கண்டறியும் நோக்கத்துடன் உலகின் பல நாடுகளிலுமுள்ள ஆய்வு மையங்களிலும் வைத்திய ஆய்வாளர்கள் மூலம் ஆய்வுகளை மேற்கொண்டது.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, ஹொங்கொங், ஜப்பான், நெதர்லாந்து, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள 13 வைத்திய ஆராய்ச்சி மையங்கள் 'சார்ஸ்' நோய்க்கான கிருமியைக் கண்டறிவதில் இரவு பகல் பாராது ஆய்வு நடவடிக்கைகளில் முழுவீச்சில் ஈடுபடுத்தப்பட்டன.

இப்போது நாம் மீண்டும் 'ஹனோய்' நகரில் இந்நோய்க் கிருமி தொடர்பாக ஆராய்ந்து அதன் தன்மையைக கண்டுபிடித்த கார்லோ உர்பானி என்ற டாக்டரை பற்றிப் பார்ப்போம்.

கார்லோ உர்பானி பிறப்பால் ஓர் இத்தாலியர். இத்தாலியின் 'அந்தோனா' பல்கலைக்கழகத்தின் தன் வைத்திய படிப்பை முடித்துக் கொண்ட அவர், தனது விசேட ஆய்வுக்கென மலேரியா நோய் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்கள் என்ற விடயங்களைத் தெரிவுசெய்தார். பாடசாலைச் சிறுவர்கள் மத்தியில் ஏற்படும் நோய்கள் தொடர்பாக விசேட சிறப்புப் பட்டம் பெற்ற இவர், பின்னர் இத்தாலியின் மெடிசின்ஸ் சான்ஸ் புறொன் ரெறர்ஸ (Medicines Sans Fronterers Italy) என்ற அரசசார்பற்ற தொண்டு நிறுவனத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

அதன் பின்னர் அவர் உலக சுகாதார நிறுவனத்தில் இணைந்து பணியாற்றினார். இவ்வாண்டில் அவர் கம்போடியா, லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் உலக சுகாதார நிறுவனத்தின் திட்டங்களில் பணியாற்ற நேர்ந்தது. 46 வயதுடைய அவர் ஹனோயில் பிரெஞ்சு வைத்தியசாலையில் பரவிய 'சார்ஸ்' நோய்க்கான கிருமி பற்றி ஆராய்ந்து கண்டு பிடித்ததுமன்றி அது பற்றி உலக சுகாதார நிறுவனத்துக்கும் விவரம் தெரிவித்தார்.

'சார்ஸ்' நோய்க்கிருமி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த வேளையில் டாக்டர் கார்லோ உர்பானியும் அந்நோய்த் தாக்கத்துக்கு உட்பட்டார். அவருக்கு முதலில் காய்ச்சலும் இருமலும் ஏற்பட்ட போதும் உண்மையில் அது அவரால இனங்காணப்பட்ட 'சார்ஸ்' நோய் தாக்கமேயாகும். அவரால் இனங் காணப்பட்ட, வியட்நாமுக்கு 'சார்ஸ்' நோயைக் காவிச்சென்ற முதல் நோயாளியான சீன - அமெரிக்க வர்த்தகர் கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி 'ஹொங்கொங்'கில் மரணமடைந்தார். டாக்டர் கார்லோ உர்பானி மார்ச் மாதம் 29ஆம் திகதி பாங்கொக் நகரில் 'சார்ஸ்' நோயினால் மரணமடைந்தார்.

'சார்ஸ்' நோயை இனங்கண்டு பிடித்த உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் கார்லோ உர்பானிக்கு பெறுமதிமிக்க கௌரவம் வழங்கப்படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அவர் அந்நோய்த் தாக்கத்தினாலேயே மரணமடைந்துவிட்டார். இச் 'சார்ஸ்' தொற்று நோய் எந்த அளவுக்கு பயங்கரமானது என்பதற்கு இச்சம்பவத்தைவிட வேறு உதாரணம் எதுவும் இருக்கமுடியாது.

டாக்டர் உர்பானி மரணமடைந்துவிட்ட போதிலும், உலகம் பூராவிலுமுள்ள 13 வைத்திய ஆய்வு மையங்களிலும் இது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தன.

'சார்ஸ்' நோய்க்கான கிருமி 'கொரோனா' வர்க்கத்தைச் சேர்ந்ததொரு நுண்கிருமியே எனப் பெரும்பாலான வைத்தியத்துறை விஞ்ஞானிகள் கருத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அதனைச் சந்தேகமின்றி உறுதி செய்து கொள்வதற்கான ஒரு பரிசோதனைமுறை கண்டுபிடிக்கப்பட்டது. அதனைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் புகழ்பெற்ற வைத்தியத்துறை விஞ்ஞானியான றொபேட் கோர்க் என்பவராவார்.

'றொபேட் கோர்க்'கின் பரிசோதனை முடிவின் பிரகாரம், இத்தொற்று நோய்க்கு உட்பட்ட நபர் ஒருவரது உடம்பின் சகல பாகங்களிலும் இத்தொற்று நோய்க்கான நுண்கிரு



மியை காணக்கூடியதாயிருக்கும். அதேபோன்று அந்த நுண்கிருமியை நோய்வாய்ப்பட்டவரின் உடலிலிருந்து பிரித்தெடுத்து, பிறிதொரு உயிரினத்தின் மீது செலுத்தி பரவி வளரச் செய்த பின்னர் அதனை வேறொரு மனித உடலில் செலுத்தினால் அக் கிருமி மூலம் அந்நோய் அப்புதிய நபரையும் பாதிக்கவேண்டும். கோர்க்கின் இக் கண்டுபிடிப்பின் முடிவின் படி குறிப்பிட்ட 13 ஆய்வு மையங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அவ் ஆய்வு மையங்களும் இந் நோய்க்கிருமி பற்றி உறுதி செய்துகொண்டன.

இப்புதிய தொற்று நோய்க்கிருமி இதற்குமுன் ஒருபோதும் மனித உடலில் காணப்படாத 'கொரோனா' இனத்தைச் சேர்ந்த புதியதொரு வகை நோய்க் கிருமியாகும். இதற்கு 'சார்ஸ்' என உலக சுகாதார நிறுவனம் பெயரிட்டுள்ளது. அப்புதிய பெயர் மூலம் டாக்டர் கார்லோ உர்பானியைக் கௌரவிக்கும் பொருட்டு அவ் நுண்கிருமிப் பிரிவுக்கு 'உர்பானிப் பிரிவு' எனப் பெயர் சூட்டப்பட்டது.

'கார்லோ உர்பானி ஒரு புதுமை மிக்க மனிதராவார். அவரது மரணத்தால் நாம் யாவரும் பெரும் துக்கமடைந்துள்ளோம்' எனத் தெரிவித்த உலக சுகாதார நிறுவனத்தின் வியட்நாமுக்கான பிரதிநிதி 'பஸ்கலி பிரடொவ் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

'அவர் சொற்களால் விவரிக்கப்பட முடியாத பெருமை கொண்ட டாக்டராவார். பொதுமக்களுக்குச் சேவையாற்றுவதே அவரது பிரதான குறிக்கோளாகும். அவர் பிரெஞ்சு வைத்தியசாலையில் ஏற்பட்ட மூச்சுத் திணறல் நோய்க்குரிய காரணத்தைக் கண்டறிய எடுத்துக்கொண்ட முயற்சிக்கும் மேலாக, அரியதொரு கண்டுபிடிப்பின்மூலம் முழு உலக மக்களுக்கும் சேவை செய்வதற்கான வாய்ப்புக் கிட்டியது. அவர் தினமும் வைத்தியசாலைக்குச் சென்று நோயாளர்களை அவதானிப்புடன் பரீட்சித்தார். பரிசோதனைக்காக அந் நோயாளிகளிடமிருந்து 'மாதிரி'களைச் சேகரித்துக்கொள்வார். வைத்தியசாலைக்குள் மேற்கொள்ளப்பட்ட தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்' எனத் தெரிவித்தார்.

## வியெஸ்ரீ

'கார்லோ உர்பானியின் மரணத்தால் உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த நாம் சகலரும் மிகுந்த மனக் கவலையடைந்துள்ளோம். உலகத்து மனித வர்க்கத்தின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக உலக சுகாதார நிறுவனம் பெரும் அக்கறை காட்டி வருகிறது என்பதனை தனது தன்னலமற்ற உழைப்பின் மூலம் அவர் நிரூபித்துள்ளார். நாம் யாவரும் ஒரு சில நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிப்பதன்மூலம் அந்த டாக்டரின் உதாரண வாழ்க்கையை நினைவு கூருவோமாக' என்று அன்னாரது மரணம் குறித்து இரங்கல் தெரிவித்த உலக சுகாதார நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் 'குறோகர்லேட்' உலகத்துப் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சுயதொழில் ஆரம்பித்து வெற்றிகாணைத் துடித்தவர்

## ஸ்பெக்ட்ரா இண்டஸ்ரீஸ் அதிபராகி சாதனை



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழிலதிபர் டபிள்யூ.எம்.விமலவீரவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழி பெயர்ப்பாளர் குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 13ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் டபிள்யூ.எம்.விமலவீர.

குருநாகலுக்கு அப்பால் மூன்றுமைல் தூரத்திலுள்ள மஹறகெலிய கிராமத்தில் பிறந்தவர் டபிள்யூ.எம்.விமலவீர. ஊரிலுள்ள பாடசாலையில் ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்புவரை கல்வி பயின்றார். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கு இவரது கல்விப் பெறுபேறுகள் போதவில்லை.

சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் 'அடப்டா' கருவி ஒன்றுக்கான பிளாஸ்ரிக் அச்சொன்றைத் தயாரித்தார். இவரது இந்த முயற்சி படிப்படியாக உயர்ந்து, இன்று ஸ்பெக்ட்ரா இண்டஸ்ரீஸ் லங்கா நிறுவனத்தின் அதிபராக உயர்ந்துள்ளார்.

ரீ.என்.எல். தொலைக்காட்சியில் தொழில் அதிபர் டபிள்யூ.எம்.விமலவீரவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* நீங்கள் ஒரு வியாபாரியாக, தொழில் அதிபராக உயர்ந்துள்ளீர்கள். நீங்கள் கடந்து வந்த பாதையை நினைவுபடுத்துகிறீர்களா?

*பதில்:* குருநாகலுக்கு அருகிலுள்ள மஹறகெலிய எனது சொந்த ஊர். ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் தோற்றிய பின்னர் சுயமாகத் தொழிலொன்றை மேற்கொள்ள வேண்டுமென எண்ணி ஒரு 'அடப்டர்' கருவியைத் தயாரித்தேன். பின்னர் 'சுவசக்தி' விளக்கொன்றை தேசிய பொறியியல் நிறுவனத்தின் அனுசரணையுடன் தயாரித்தேன். 1983ஆம் ஆண்டு 'ஸ்பெக்ரா இண்டஸ்ரீஸ்' நிறுவனத்தை ஆரம்பித்தேன். அக்கால கட்டத்தில் நாட்டின் பல பகுதிகளில் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 'சுவசக்தி' விளக்குக்கு நல்ல கிராக்கி இருந்தது.

பற்றரியினால் சூரிய சக்தியில் இயங்கும் 'சுவசக்தி' விளக்குக்கு மின்சாரம் இல்லாத கிராமங்களில் இருந்து பெருந்தொகையான கொள்வனவுக் கட்டளைகள் வந்து குவிந்தன. பற்றரியை சார்ஜ் செய்வதற்கு ஓர் இயந்திரம் தேவைப்பட்டது. புத்தக அறிவின்படி நாங்களாகவே பற்றரி சார்ஜ் இயந்திரமொன்றைத் தயாரித்தோம். எமது நிறுவனம் படிப்படியாக முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருந்தது. 1986ஆம் ஆண்டு 'ஸ்பெக்ரா' என்ற பெயரில வெல்டிங் டிரான்ஸ்போமர் இயந்திரமொன்றையும் தயாரித்து விநியோகித்தோம்.

*கேள்வி:* உங்கள் வழியில் இலங்கை வர்த்தக துறையினருக்காக நீங்கள் தயாரித்த வேறு கண்டுபிடிப்புகள் எவை?

*பதில்:* மின்சாரத் தடை அடிக்கடி ஏற்படும் காலகட்டத்தில் பற்றரி மூலம் பெறும் மின்சாரத்தை சகல மின்சார உபகரணங்களுக்கும் பயன்படுத்தும் வகையில் ஓர் இயந்திரத்தை உருவாக்கினோம். அத்துடன், குறைந்தளவு விறகுகளைக்கொண்டு அதிக உஷ்ணத்தைக் கொண்ட அடுப்பு ஒன்றையும் தயாரித்தோம். இவ்விரு தயாரிப்புகளும் வெகுவிரைவில் சந்தைக்கு வரவுள்ளன.

*கேள்வி:* இலங்கையில் நடைமுறையில் உள்ள வரிகள் தொடர்பான உங்கள் கருத்து என்ன?

*பதில்:* உண்மையிலேயே வரிகள தொடர்பாக பிரச்சினைகள் இருக்கின்றன. நாங்கள் முன்னர் 13சதவீத வரியைச் செலுத்தினோம். இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக 20சத வீதத்தைச் செலுத்துகிறோம். நாங்கள் முன்னரை விட 7 சதவீதம் அதிகமாகச் செலுத்த வேண்டியுள்ளது. இதுவே எமக்குள்ள பிரச்சினை.

*கேள்வி:* இதைத்தவிர வேறு பிரச்சினைகள் இருக்கின்றனவா?

*பதில்:* இல்லை. எம்மைப் பொறுத்தவரை வர்த்தகப் போட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் எமது வாடிக்கையாளருக்கு நல்ல பொருள்களை உற்பத்தி செய்து வழங்குகின்றோம். விற்பனைக்குப் பின்னும் முறையான சேவையை வழங்குகிறோம். இதனால் வாடிக்கையாளர்கள் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

*கேள்வி:* தொழிலாளர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எனக்கு தொழிலாளர்களிடமிருந்து அளப்பரிய ஆதரவு கிடைத்து வருகிறது. நான் அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொள்கிறேன். நிறுவனம் ஆரம்பித்தபோது சேர்ந்த தொழிலாளர்கள் இன்றுவரை என்னிடம் தொழில் புரிகின்றனர்.

*கேள்வி:* நீங்கள் விருதுகள் பெற்றிருக்கிறீர்களா?

*பதில்:* சில வாரங்களுக்கு முன் வடமேல் மாகாண தொழில் மற்றும் வர்த்தக சபை நடத்திய விழாவில் பொறியியல் துறையில் முதற்பரிசு எனக்குக் கிடைத்தது.

*கேள்வி:* உங்கள் வியாபாரத்துறையின் எதிர்காலத்திட்டம் என்ன?

*பதில்:* எதிர்காலத்தில் எமது தயாரிப்புகளுக்கு ஐஎஸ்ஓ. தரச் சான்றிதழ் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் - இவ்வாறு கூறினார் டபிள்யூ. எம். விமலவீர.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்



செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2636756 இருந்து 2650233 வரை

சீட்டிழுப்பு இல. 1400

திகதி 14.05.2003



**வெற்றி எண்கள்** 06 24 26 50 53 போனஸ் எண் 04

## ஜக்பொட் பரிசு

## ரூபா.2,314,300/- வெல்லப்பட்டுள்ளது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 2,314,300/- | 2,314,300- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 81 | 10,000/- | 810,000/- |
| 3 | 4,184 | 500/- | 2,097,000/- |
| 2 | 70,467 | 20/- | 1,409,340/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 06ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 86,024 | 10/- | 860,240/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,880,880/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3635992க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மே 17ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2639910-7-54
2637167-2-76
2645591-6-67
2642279-0-41
2641750-9-79

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX OGILVY


# இராணுவத் தளபதியையும் றொக்கா சந்தித்துப் பேச்சு





இருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்திருந்த அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்கா, செவ்வாயன்று இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தார். இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்லவைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினார். றொக்காவுடன் அமெரிக்க தூதரக ஆலோசகரும் உடன் இருந்தார். தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் பற்றியும் நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கை பற்றியும் அவர்கள் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

றொக்காவை இராணுவத் தளபதி வரவேற்பதையும் அவர்கள் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.



கட்டுவன் மேற்கில் வசித்து வரும் ஆதரவற்ற வயோதிப மாது ஒருவரின் குடிசை மீதும் காற்றினால் பாறிய பனை மரம் ஒன்று வீழ்ந்து சேதம் விளைவித்துள்ளது. மரம் வீழ்ந்த போது அந்த வயோதிப மாது தனது குடிசையினுள்ளேயே இருந்துள்ளார். தெய்வாதீனமாக அவருக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

தன் குடிசை மீது வீழ்ந்துள்ள பனையை அகற்றி அதனை மீளமைக்கக்கூடிய வழிவகைகூடத் தெரியாமல் - உதவி இல்லாமல் - பரிதவித்துப் போயுள்ளார் அந்த வயோதிப மாது.

பனை வீழ்ந்து சேதமாகியுள்ள அவரது குடிசையையும் அந்த வயோதிப மாதையும் படத்தில் காணலாம்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 04 - 1970

உதிர்வு 23 - 05 - 1997

## அமரர் கனகசபாபதி சத்தியநேசன்

*சூரியன் இருண்டதோ கடரொளி மங்கிற்றோ*
*வானம் கறுத்ததோ வட்டநிலா மறைந்ததோ*
*உங்கள் நினைவில் எந்நாளும்*
*வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.*

*கலாஞ்சலி,*
*அல்வாய்.*

கலாஜினி (மனைவி),
விதுர்ஷா (மகள்)
குடும்பத்தினர்.

(18023)

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 06 - 10 - 1957

உதிர்வு 27 - 05 - 2002

## அமரர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி

(S.B. மினிபஸ் உரிமையாளர்)

திதி: 16.05.2003

மகாவிருட்ச மொன்றின்
விழுதுகளில் முதன்மையானவன் நீ
முன்னிலைப்படுத்தப்பட்டவன் நீ
செடிகளை அரவணைக்க தேர்ந்தெடுக்கப்பட்டவனும் நீ
அன்பால் நிறைந்தவன் நீ
அப்பாவியாய் வளர்ந்தவன் நீ
பண்பால் உயர்ந்தவன் நீ
பாசத்தால் பகைமையை மறைத்தவன் நீ
தேசத்தை மட்டும் நேசிக்க முடிந்த உனக்கு வேசத்தை ஏனோ
வேவு பார்க்க முடிவில்லை
ஒரே நிமிடத்தில்
பிரிவின் இடைவெளி தெரிந்தது
நிழலின் அருமை புரிந்தது
தனியானோம் என்ற கொடுமை தெரிந்தது
பாதத்திருவடியில் பூக்கள் தூவி
உங்கள் ஆசியில் வாழ்வோம் வளர்வோம் என ஏங்கும்....

*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்கள்.

(18022)

## வவுணதீவு பிரதேச சபை முன்னாள் உறுப்பினரை காணவில்லை!

மட்டக்களப்பு,மே16

வவுணதீவு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் புளொட் அமைப்பைச் சேர்ந்தவருமான வேலாயுதம் எனபவரை மூன்று நாள்களுக்கு மேலாகக் காணவில்லை என உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

இவர் மட்டக்களப்பு நகர உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள புளியந்தீவில் வசித்து வந்தார் என்று கூறப்படுகின்றது. (ம)


**ஓசனி**

*இசைப்பயிற்சி வகுப்புகள்*

திங்கள் - வெள்ளி } 4.00 p.m.

▲ புதிய அனுமதி வழங்கப்படுகின்றது.

**தூரிகை**

M.M.V. வீதி,
நெல்லியடி. (சி-27943)

**வேலையாள் தேவை**

*லொறி பொடி (Lorry Body) வேலை செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.*

தொடர்பு முகவரி:
**சிவலிங்கம் மோட்டோஸ்,**
*77, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (18019)

**விற்பனையாளர்கள் தேவை**

த.குமாரசாமி அன் சன்ஸ் கண்ணாடிக்கடைக்கு விற்பனையாளர்கள் தேவை.
(ஆண்கள் மட்டும்)

*த.குமாரசாமி அன் சன்ஸ்*
248/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (18017)

**பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்**

HAIR STYLE, ஐசிங், துணிவர்ணமிடல், தையல், பூவேலை பயிற்சிகளுக்கு விண்ணப்பம் செய்தோரும் கலந்துகொள்ள விரும்புவோரும் சமுகந்தரவும்.


☆ *தூரிகை* - கல்வியங்காடு
17.05 சனி காலை 10.மணி.
☆ *தூரிகை* - நெல்லியடி
18.05 ஞாயிறு காலை 10. மணி.

(சி-27944) - இயக்குநர்.


# காற்றினால் விளைந்த கடும் சேதங்கள்

குடாநாட்டில் செவ்வாயன்று வீசிய கடும் காற்றினால் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பெரும் அனர்த்தங்களும் சேதங்களும் இடம்பெற்றுள்ளன. வலி.வடக்குப் பகுதியில் இதன் சேதங்கள் அதிகம் காணப்படுகின்றன. மல்லாகம், ஏழாலை பகுதிகளில் கடும் காற்றினால் இரு குழந்தைகள் உட்பட நால்வர் காயங்களுக்கு உள்ளாகினர். சிலர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

'வலி.வடக்குப் பகுதிகளில் ஏற்பட்ட சேதங்களையே இந்தப் படங்களில் காண்கிறீர்கள். (ம)




ஏழாலை தெற்கில் காற்றினால் பனை ஒன்று பாறி வீழ்ந்ததில் விடு கடும் சேதமடைந்தது. இதனால் வீட்டிலிருந்த இரு சிறுவர்களும் வயோதிப மாது ஒருவரும் காயமடைந்தனர். கைக்குழந்தை ஒன்றும் அதன் தாயும் மயிரிழையில் உயிர்தப்பினர்.



மல்லாகம் 7 ஆம் கட்டையில் பனையொன்று வீட்டுக்கூரை மீது வீழ்ந்ததால் கூரை சேதமடைந்தது.



அளவெட்டி அளகெல்லை விநாயகர் சிறுவர் பாடசாலை கூரையையும் காற்று அள்ளிச் சென்று விட்டது.



அளவெட்டி வடக்கில் பனையொன்று முறிந்து வீழ்ந்து மின்சாரக் கம்பிகளை அறுத்துள்ளதுடன் மின்கம்பத்தையும் உடைத் தெறிந்துள்ளது. (ம-f)

# கடந்தகால போரில் இழந்தது உயிர்களை மட்டுமல்ல தமிழ் மக்களது சமூக கட்டுமானங்களையும்தான்

## புலிகளின் மட்டு.- அம்பாறை அரசியற் பொறுப்பாளர் கௌசல்யன்

காரைதீவு,மே16

கடந்த கால போரில் இழந்தது பெறுமதிமிக்க உயிர்களை மட்டுமல்ல, தமிழ் மக்களது சமூக கட்டுமானங்களையும்தான். எனவே, அவற்றை மீள வளர்த்தெடுக்க அனைவரும் முன்வரவேண்டும்.

- இவ்வாறு புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய வளவில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அம்பாறை மாவட்ட இணைப்பாளர் செ.துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கௌசல்யன் மேலும் பேசுகையில்:-

ஒரு சமுதாயத்தின் உயரிய சொத்து அதன் கலாசாரங்களும், கட்டுமானங்களும். தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தில் அவை மழுங்கடிக்கப்பட்டிருக்கின்றன; சிதறடிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டின் எதிர்கால தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் இளைஞர்கள். தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தி போராடியதன் பலனாக இன்று ஒரு சமாதான சூழல் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அடிப்படைக்காரணம் மாவீரர்களின் தியாகங்களே. தமிழ்மக்களைத் தனித்துவமாகக் காட்டியதும் இவ்வீரமிகு போராட்டமே! வீரம் செறிந்த தாக்குதலூடாக வென்றெடுக்கப்பட்டது இன்றைய சமாதானம். எனவே, மாவீரர்களை நாம் நன்றியுடன் வாழ்த்த வேண்டும்; நினைவுகூரவேண்டும்.

போராட்டத்திற்கு தமிழ் மக்களின் வலு சேர்ந்ததன் விளைவாக தமிழர் பிரச்சினை சர்வதேச பிரச்சினையாக மாறியது. இலங்கையில் தமிழ் மக்கள் வெல்லவும் கூடாது, தோற்கவும் கூடாது என்பதில் பல வெளிநாடுகள் அவதானமாக இருந்தன.

அதனையும் தாண்டி எமது தலைவரின் தீர்க்கதரிசனமான வழிகாட்டலில் இளைஞர்கள் போராடினர். அவர்களுக்கு உரிய கௌரவத்தை நாம் வழங்கவேண்டும்.

இதையுணர்ந்து ஒவ்வொரு தமிழ் மகனும் செயற்படவேண்டும். நேரடியாகப் போராட்டத்தில் இணையாவிட்டாலும் பங்களிப்பையாவது நல்கவேண்டும்.

போராட்டத்தைக் காரணம் காட்டி இன்று சமூகம் சற்று சீர்குலைந்துள்ளது. சமூக கட்டுமானங்களும் சீரற்றுள்ளன. இளைஞர்கள் மத்தியில் ஒழுக்கம் அருகி வருவதை காணக்கூடியதாயுள்ளது. இது வேதனைக்குரியது. நடந்தது நடந்ததாகட்டும். இனிமேல் இளைஞர்கள் ஒழுக்கத்தைப் பேணி நல்ல பிரஜைகளாக வாழ வேண்டும். எமது பாரம்பரியம் ஒருபோதும் மறக்கப்படக்கூடாது. அவை சீராக கட்டியெழுப்பப்பட வேண்டும்.

சமூகத்தின் கட்டுமானங்களையும், பாரம்பரியங்களையும் பேணி நடக்கின்ற போதுதான் சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். கல்வியால் மட்டும் தனித்துநின்று இதனைச் செய்துவிட முடியாது.

செய்தி பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். ஆற்றல்களை வளர்க்கவேண்டும். கல்வியை கற்பது தொழிலுக்காக மட்டுமல்ல, சிறந்த பிரஜையாக வாழவும்தான்.

எமது தமிழீழத்தில் நிறைய வளங்களுண்டு. அவற்றை விருத்தி செய்து பொருளாதாரத்தைப் பெருக்க வேண்டும். தமிழீழத்தில் விவசாயம், மீன்பிடி இரண்டும் பிரதான தொழில்களாகியுள்ளன. இவற்றை நவீனமயப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளோம். அதற்கான கல்வியைத் திட்டமிட்டு கற்க வேண்டும்.

எமது தமிழீழத்தையும் சிறுகைத்தொழில் நாடாக வளர்த்தெடுக்க வேண்டும். எமது தலைவரின் காலத்தில் தமிழீழத்தை வென்றெடுக்க வேண்டும். ஒவ்வொரு தமிழ் மகனும் துணிவுடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட வேண்டும். நாம் கேட்பதெல்லாம் எம்மைச் சுதந்திரமாக வாழவிடுங்கள் என்பதே. இதில் தவறு இல்லை ஒன்று சேருவோம், இலக்கை அடைவோம் - என்றார்.

மாவட்ட பணிப்பாளர் சுரேஸ், அதிபர் எஸ்.அருளம்பலம், சமூக சேவையாளர் வெ.சபாநாயகம் ஆகியோரும் இங்கு பேசினர். (ஐ)

# கொடிகாமம் பொலீஸில் ஒரு தொகுதி அ.அட்டைகள்

## உரியவர்கள் பெறலாம் என அறிவிப்பு

தென்மராட்சி,மே16

பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பின்வரும் அடையாள அட்டைகள் கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் நேரில் வருகைதந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

ஒப்படைக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு உரித்தானவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

நாகலிங்கம் நாகராசா - நாகர் கோவில் தெற்கு, மகாதேவா விஜய மோகன் - மந்துவில் மேற்கு, வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை - இயற்றாளை, கனகரத்தினம் செல்வதீபன் - பளை தெற்கு, சுப்பிரமணியம் சின்னத்தம்பி - திருவையாறு.

வீரன் கந்தையா - மீசாலை வடக்கு, தம்பிப்பிள்ளை தர்மலிங்கம் - மீசாலை வடக்கு, இராமநாதன் சிதம்பரநாதன் - மிருசுவில், முத்தையா நடராசா - மீசாலை. (எ-117)

# ஆசிரியர் நியமன விவகாரம் பிரதமரின் நேரடிக் கவனத்திற்கு!

## தமிழர் ஆசிரியர் சங்கச் செயலர் கூறுகிறார்

காரைதீவு,மே16

"இழுபறி நிலையிலிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் நியமனம் மற்றும் உயர் தர ஆசிரியர் நியமனம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

- இவ்வாறு கூறினார் இலங்கைத் தமிழ ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம்.

வடக்கு - கிழக்கு மாகாண 1000 தொண்டர் ஆசிரியர் நியமனம் மற்றும் உயர்தர ஆசிரியர் நியமனம் என்பன மாதக்கணக்கில் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பாக அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

மேற்படி ஆசிரியர் நியமனம் தொடர்பாக தமிழர் ஆசிரியர் சங்கம் ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தை நடத்தி, கல்வி அமைச்சருடன் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

முதலில் தொண்டர் ஆசிரியர் பற்றி அவர் கூறியதாவது:-

கல்வி அமைச்சருடனான எமது சந்திப்பின் பலனாக பிரதம மந்திரியுடன் ஏப்ரல் 10இல் சந்திப்பொன்று நடந்தது. அதில் எடுத்த முடிவின்படி சட்டமா அதிபருடன் பேசப்பட்டது. அவரும் பிரதமருக்கு சாதகமான பதிலை அனுப்பியிருந்தார். அதன்படி பொதுச் சேவை ஆணைக்குழு திறைசேரியிடம் எழுத்துமூல பத்திரத்தைக் கேட்டது. தற்போது அதுவும் கிடைக்கப்பெற்றுவிட்டது.

இனி பொதுச்சேவை ஆணைக்குழு நியமனம் வழங்க மாகாண கல்வியமைச்சுக்குப் பணிப்புரை விடுவதுதான் மீதமுள்ள பணி. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் பேசியதன் பேரில்தான் திறைசேரிப் பத்திரம் கிடைக்கப் பெற்றது. குறைந்தது, ஒரு மாதத்திற்குள் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று கருதலாம்" - என்றார்.

உயர்தர ஆசிரியர் நியமனம் பற்றி அவர் கருத்துக் கூறுகையில்:-

" உயர்தர ஆசிரியர் நியமனம் ஒரு பரீட்சையினூடாக வழங்கப்படும் முறை. அதே பரீட்சையினூடாகத் தொண்டர் ஆசிரியர்களையும் நியமிக்க" வேண்டும் என்று பொதுச் சேவை ஆணைக்குழு ஒரு கட்டத்தில் கேட்டுக்கொண்டது.

நாம், பரீட்சை வைக்காமல்தான் தொண்டர் ஆசிரியர் தெரிவு இடம்பெற வேண்டும் என்று கேட்டோம். இதனால், இரு நியமனங்களும் இழுபட்டன. அதனால் க.பொ.த.(உயர்தரம்) சித்தியடைந்தோரை ஆசிரியராகச் சேர்ப்பதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டது.

தொண்டர் ஆசிரியர் பிரச்சினையோடு உயர்தர ஆசிரியர் நியமனமும் பின்னிப் பிணைந்துள்ளது. இதனால் அப்பிரச்சினை முடிந்ததும் இவ்வாசிரியர் பிரச்சினை தீரும். எது எப்படியிருப்பினும் காலம் தாழ்த்துவது கண்டனத்துக்குரியது. விரைவில் நியமனம் நடைபெறும் என்ற நம்பிக்கையில் தொழிற்சங்க நடவடிக்கையை ஒத்திப்போட்டுள்ளோம் என்று கூறினார்.



சட்டத்தரணி சி.பொன்னையா எழுதிய 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்...' என்னும் காவியநூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். பல்கலைக்கழக நூலககேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது. அப்போது அவருக்கு 'கவிக்கோ' என்னும் பட்டம் வழங்கி பொன்னாடை போர்க்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா மாலை அணிவிப்பதையும் அருகில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

# விநாயகனைத் தொழுதால் விக்கினங்கள் தாமே அகலும்

'ஓம்கார ரூபாய நம' என வேதம் சொல்லும் மகா கணபதியை 'பிரணவ பொருளாம் பெருந்தகை ஐங்கரன்' என்று வெற்றி வேட்கை போற்றுகின்றது.

தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லா மேன்மைபெற்ற ஸ்ரீகணேசன் வேதங்கள், புராணங்கள் இதிகாசங்கள், ஆகமங்கள் மந்திர சாஸ்திரங்கள் இவற்றால் போற்றப்படும் மிக உயர்ந்த தெய்வம்.

ஏழுகோடி மந்திரங்களும் ஓங்காரத்தின் நின்றும் எழுந்தவையே. ஓங்கார ரூபியாய் அதன் பொருளாய் விளங்கும் கணபதி கணங்கள் எல்லாவற்றுக்கும் மேலானவர். இப்போது இந்துசமயத்துள் கலந்துவிட்ட காணாபத்தியம் கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டது.

விநாயகப் பெருமானின் திருவுரு

**ஞானக்கதிர்**

வம் தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் முதலிய எல்லா உயிர்களுக்கும் அருள்பாலிப்பவர் என்பதை உணர்த்துவதோடு இன்னும் பல அரிய தத்துவங்களை உடையனவாகவும் அவரது திருக்கரங்கள் ஏந்திநிற்கும் ஆயுதங்கள் ஒவ்வொன்றும் சகல ஜீவராசிகளுக்கும் வேண்டுவனவற்றை அளிப்பன - காப்பன - அருள்வன எனவும் புராணங்கள் கூறுகின்றன. ஆனைமுகப் பெருமானின் பெருமையையும் வழிபடும் முறையையும் பிரமாண்ட புராணம், கணேச புராணம், முத்கல புராணம், பத்மபுராணம், மானவகருஹ்ய சூத்திரம் என்பன மிகத்தெளிவாகக் கூறுகின்றன. சித்தி, புத்திகளின் நாயகத் தத்துவமும் முத்தியும் தரவல்லவராய் இலங்கும் சர்வலோக நாயகமான விநாயகர் ஆதி சிவனின் தேரின் அச்சையே நொடியில் பொடி செய்த அதிதீரன் எனும் பெருமை பெற்றவர்.

காட்சிக்கு எளியனவாய் கருத்துக்கு இனியவனாய் இலகுவழியில் வணங்குவதற்கு உகந்தவனாய் முதன்மையுற்று விளங்கும் ஸ்ரீ கணபதியை மூத்த நாயனார், மூத்த பிள்ளையார், ஏரம்பன், லம்போதரன், கணநாதன், ஏகதந்தன், கரிமுகம், நம்பி என பல திருநாமங்களால் அர்ச்சித்து பெரியோர் புகழ்ந்து துதித்தனர். பிரபஞ்சத்தின் இயக்கத்தையும் உயிர்களின் வாழ்க்கை நிலையையும் முற்பட நிர்ணயித்து ஆள்பவனும் பிள்ளையாரே.



எதையும் தாங்குபவராகவும் எதையும் தாங்கப்படுவராகவும் இருந்து பெருங்கருணை செய்யும் ஐங்கரப் பெருமான், பிரமன், திருமால், உருத்திரன், ஈஸ்வரன், சதாசிவன் என்னும் ஐந்து தேவ வடிவங்களையும் பஞ்ச கிருத்தியம் என்னும் ஐந்து தொழில்களையும் புரிபவர் என இருக்குவேத சூத்திரம் விவரிக்கின்றது.

இன்னும் விக்னேஸ்வர கடவுளின் ஐந்து திருக்கரங்களும் சிவாயநம எனும் திருவைந்தெழுத்தையும் உணர்த்துவதோடு ஐம்பெரும் சக்தியாய் விளங்கும் பஞ்ச பூதங்களையும் தன்னகத்தே கொண்டவர் என கணேச புராணம் போற்றுகின்றது.

சிவனும் விநாயகப் பெருமானும் வேறல்ல என்பதை உணர்த்துவதற்கு நயனங்கள் மூன்றுடை நாதனுக்கு ஒப்ப ஸ்ரீ கணபதிக்கும் விழிகள் மூன்றே. அதனால் அவருக்கு விக்னேஸ்வரன், கணேஸ்வரன் என்னும் காரணச்செறிவுள்ள பொருள் பொதிந்த பல திருநாமங்களைச் சூட்டி ஆன்றோர் ஆராதித்தனர்.

பிள்ளையாரின் முக்கண்களில் நடுக்கண் ஞானக்கண்ணாகவும் மற்றைய இரு விழிகளும் சூரியனாகவும் சந்திரனாகவும் இயங்குகின்றன என்பது சமயவாதிகளின் திருவாக்கு. விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாய், நாதனுமாய் நின்றருள் கணேசக் கடவுளை புந்தியில் இருத்தி வந்திப்போருக்கு குறைவிலாது வேண்டு வென சித்திக்கும். ஞானத்துக்கு மகேஸ்வரனையும் மோட்சத்துக்கு மகா விஷ்ணுவையும் சுக வாழ்வுக்கு சூரியனையும் சௌபாக்கியத்துக்கு பார்வதிதேவியையும் வித்தைக்கு சரஸ்வதியையும் கல்யாணத்துக்கு இந்திராணியையும புத்திரபாக்கியத்துக்கு கந்தசாமியையும் வழிபட்டால் பலன் கிடைக்கும் என்பர்.

ஆனால், சினத்தை அழித்து சிந்தை தெளிந்து மெய்யன்போடு பிளளையாரை வழிபடுபவர்க்கு சர்வ சித்தியும் கைகூடும்.

**கந்த. தியாகராசா**

எப்போதும் பிரம்ம ரூபமாய் மாறுபாடுகளற்று மாறுபாடுகளுக்கு அதிபதியாய் விளங்கும் வேழமுகத்தவனை காண்பவன் எல்லாத் தேவர்களையும் காணும் பேறுபெறுகின்றான். ஸ்ரீமகாகணபதி மகிழ்ந்தால் மூவுலகிலும் உள்ள எல்லோரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கணேச மகிமை ஸ்தோத்திரம் அவரது பெருமையை பேசி நிற்கிறது.

தூய பக்திகொண்டு ஸ்ரீகணபதியைத் துதிக்கும் பூதலத்தாருக்கு மாடு மனைச் செல்வாக்கும், சொல்வாக்குச் சிறப்பும் நற்காரிய சித்தியும் அடையப்பெற்று மேன்மையுறுவதனால் அத்தகைய பெரும் பேற்றினை தாமும் பெற்றுய்ய வேண்டி வானவரும் முப்போது வணங்கி துதிக்கின்றார்கள்.

உள்ளக் கமலம் மட்டும் வேண்டும் உத்தமனாரிடம் தப்பாது சென்று அருளோடு நுண்ணறிவும் சங்கத் தமிழ் மூன்றும் கேட்டுப்பெற்ற ஔவையார் தும்பிக்கையானை நம்பிக்கையோடு பணிந்தேத்தும் எவர்க்கும் வாக்கு வசீகரனும் இலட்சுமிகடாட்சமும் கைகூடும் என்று கூறியுள்ளார்.★

# மனித வாழ்நாள் நிகழ்வுகளை நினைவுபடுத்துவன சிறுகதைகள்

## நூல் ஆய்வுரையில் செம்பியன்செல்வன்

சுழிபுரம்,மே16

மனிதனின் வாழ்நாள் நிகழ்வுகளை நினைவுபடுத்துவன சிறுகதைகள்.

- இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் செம்பியன்செல்வன்.

ராணி சீதரனின் 'நடுகல்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் கா.நடராசா தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நமது ஈழத்தில் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனினம் ராணி சீதரன், கோகிலா மகேந்திரன் போன்றோர் தரமான எழுத்தாக்கங்களை வெளியிட்டு வருவதையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும் - என்றார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய செங்கை ஆழியான் தமது உரையில்,

கருவும் உருவும், மொழியும் அமைந்ததாக கதைகளை வடிவமைப்பது எழுத்தாளர்களின் மிகமுக்கிய கடமை. அதனை ராணி சீதரன் முறைப்படி நிறைவேற்றியுள்ளார்.

சமூகம் பற்றிய நூலாசிரியரின் நோக்கு சிறுகதைகளில் பரந்து காணப்படுகிறது. ராணி சீதரனிடம் ஈழத்து சிறுகதை உலகம் நிறையவே எதிர்பார்க்கின்றது - என்றார்.

இறுதியில் நூலாசிரியை ஏற்புரை நிகழ்த்தினார். (எ-ரி-28)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 - 10 - 1939



மறைவு 17 - 04 - 2003

### அமரர் துரையப்பா இராசலிங்கம்

17.04.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் துரையப்பா இராசலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (17.05.2003) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*சபாபதி வீதி,*
*தலையாழி,*
*கொக்குவில்.*

(18037)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 12 - 01 - 1923



இறப்பு 16 - 04 - 2003

### திருமதி அன்னம்மா துரைராஜா

பண்புக்கோர் இருப்பிடமாய்
பார்வையில் பத்தினியாய்
ஆதரிப்பில் தெய்வமாய்
இல்லத்தில் ஒளிவிளக்காய்
உறவினர்க்கு உயிராய்
ஊரார்க்குப் பரோபகாரியாய்
பெண் குலத்துக்கு கற்புக்கரசியாய்
வழிகாட்டி வந்த அன்புத் தெய்வமே!
எங்கு சென்றாய்! ஏன் எங்களைத்
திடீரென விட்டுப் பிரிந்தாய்?
ஏங்குதே எங்கள் நெஞ்சம்! ஐயகோ
தினமும் கண்ணீரில் கரைகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

*இணுவில் தெற்கு.* (18033) - குடும்பத்தினர்.


### வரணிப் பகுதி வயல் உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே16

வரணி கரம்பாள் பிள்ளையார் கோவில் பிரதேச வயல்நில உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று நாளை ச[illegible] கிழமை காலை 10மணிக்கு [illegible]ளையார் கோவில் முன்றிலில் ந[illegible]பெறவுள்ளது.

அப்பகுதியில் வெ[illegible]ளவாய்க்கால் ஒன்று வெட்டப்ப[illegible]ள்ளதாகவும்-

அது தொடர்பாக ஆராயும் பொருட்டு யாழ்.மாவட்ட பொருண்மியப் பொறுப்பாளர் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளதாகவும் -

இடைக்குறிச்சி விவசாய சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார்.(எ-9)

### ஆரம்ப கணித மாநாடு

யாழ்ப்பாணம்,மே16

வடக்கு-கிழக்கு திணைக்களத்தின் யாழ்ப்பாணக் கல்வி வலயமும் தேசிய கல்வி நிறுவனத்தின் ஆரம்ப கணித அலகும் இணைந்து நடத்தும் ஆரம்ப கணித மாநாடு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (எ-5)

### முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே16

சமூக செயற்பாட்டு மையம் நடத்தும், சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பை மேமபடுத்துவது தொடர்பான முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்று நாளையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிமுதல் நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் பிரதிநிதிகள். சமூகப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும 'கவசம்' அமைப்பைச் சேர்ந்தோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர்.

(எ-9)

### வெசாக்கை முன்னிட்டு உணவுப்பொதிகளை படையினர் வழங்கினர்

தென்மராட்சி,மே16

வெசாக் பண்டிகையை முன்னிட்டு 55ஆவது படையணி தலைமை அலுவலக அதிகாரிகள் நேற்று பகல் மிருசுவில், தவசிகுளம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கினர்.

படையணியின் பிரிகேடியர் எதிரிசிங்க தலைமையில் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில், நேற்று காலை தொடக்கம் மிருசுவில் ஊடாகப் பயணம் செய்தவர்களுக்கு படையினர் குளிர்பானமும் சிற்றுண்டி வகைகளையும் வழங்கி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

(எ-117)

### முன்பள்ளி விளையாட்டு விழா

வடமராட்சி,மே16

தொண்டைமானாறு கலைவாணி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் அ.கிருபாகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைச் செயலாளர் ந.அரியரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.


(எ-173)

## தெய்வீகஸ்தலங்களில்...









புங்குடுதீவு சதானந்த சிவன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேக நிகழ்வில் பூரண கும்பத்துக்கு பிரதம குரு பிரம்மஸ்ரீ தானு வாசுதேவக் குருக்கள் ஆராதனை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் -

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயம், ஊர்காவற்றுறை - தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி ஆலயம் ஆகியவற்றில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகளை முறையே இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் -

நவாலி வளாவோடை கண்ணகை அம்மன் ஆலய மணிக் கூண்டுக் கோபுர கும்பாபிஷேகத்தை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (எ)

# இம்முறை பேச்சு முறிந்தால் இறுதிச் சமரிலேயே சந்திப்பு!

## புலிகளின் மட்டு.-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவிப்பு

காரைதீவு,மே16

தற்போதைய சமாதானப் பேச்சுகளை அரசு இழுத்தடிப்பது போல் தெரிகிறது. அதனால் இப்பேச்சுக்கள ஒருவேளை தோல்வியுற்றால் இனியொரு பேச்சுக்கு இடமேயில்லை. இறுதி இராணுவச் சமரிலேயே நாம் சந்திக்க வேண்டி நேரிடும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை பிராந்திய சிறப்பு இராணுவத் தளபதி த.ரமேஷ், வீரமுனையில் கணனிப் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

படித்துவிட்டு வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் கணனிப் பயிற்சியொன்று வீரமுனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தில் நிறுவப்பட்ட இக்கணனிப் பயிற்சி நிலையத் திறப்பு விழா கடந்த சனியன்று காலை மாவட்ட இணைப்பாளர் எஸ்.துஷ்யந்தன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக அந்நிகழ்வில் கலந்துகொண்ட தளபதி ரமேஷ் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"சந்திரிகா-ரணில் அதிகாரப் போட்டியினால் பாதிக்கப்படுவது தமிழர்களின் வீரவரலாறும் தமிழர்களின் பெருமையும் தான்.

"தமிழர்களுக்கான தீர்வை தள்ளிப் போடும் ஓர் உபாயமாகவே இவர்களது இழுபறியைக் கருதவேண்டியுள்ளது.

எமது நாட்டுப் பிரச்சினைக்கு சமஷ்டி ஒரு நல்ல தீர்வு என உலக நாடுகளே சொல்கின்றன. ஆனால், எமது அரசமைப்பில் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லைப்போல் தெரிகிறது.

பேச்சு என்ற போர்வையில் காலத்தைக் கடத்தும் நிலையை இங்கு காண்கிறோம். அரசமைப்புத் திருத்தம் என்றாலும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இருபங்கு பெரும்பான்மை பலம் வேண்டும். அப்படி நிறைவேற்றப்பட்டாலும் மக்கள் தீர்ப்பு என்று இழுத்தடிப்பார்கள்.

மொத்தத்தில் காலம் இழுத்தடிக்கப்படுகிறது. இன்றைய பேச்சுக்கள் தோற்றால் இனி சமரில் தான் சந்திப்பு.

மீண்டும் ஒரு சண்டையை ஆரம்பிப்பதா, இல்லையா என்பது நோர்வேயிடமோ அல்லது வேறு வெளிநாடுகளிடமோ தங்கியிருக்கவில்லை. ஆக, இலங்கை அரசில் மட்டும் தான்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதிக்கு எதிராக

## குற்றவியல் பிரேரணையைக் கொண்டுவந்து வெல்ல முடியும்; ஆனால், பிரதமர் விரும்பவில்லை

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகிறார்

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து அதனை 113 வாக்குகளால் வெல்வதற்கு எம்மால் முடியும். ஆனால், அதை உடனடியாகச் செய்வதற்கு எமது பிரதமர் விரும்பவில்லை. நாட்டின் தலைவரான ஜனாதிபதி, அரசின் தலைவரான பிரதமருடன் இணக்கப்பாட்டுடன் செயற்படவேண்டுமென்பதையே அவர் விரும்புகிறார்.

தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் யுத்தசூழல் ஓய்ந்து அமைதி நிலவுகிறது. முன்னர் தயக்கம் காட்டிய வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இப்பொழுது இலங்கையில முதலீடு செய்வதில் ஆர்வங்காட்டுகின்றனர். கைத்தொழிற்துறை முன்னேற்றம் கண்டுள்ளது. அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் மாநாடு பெரும் தொகை நிதி உதவியை இலங்கைக்குக் கொடுத்துதவும்.

இவையாவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆட்டம் காணச் செய்யுமென ஜனாதிபதி அச்சம் கொண்டுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்க்க அவர் எண்ணுகிறாரா? அது கடைசிவரை நிறைவேறப் போவதில்லை - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ம)

## தமிழகத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தமிழுணர்வு அதிகம்!

### காரைநகரில் தமிழக சொற்பொழிவாளர் மணியன்

காரைநகர்,மே16

தமிழகத்தைவிட இலங்கையில் தமிழுணர்வு, மொழியுணர்வு, சமய உணர்வு, பண்பாட்டுணர்வு, இனவுணர்வு என்பன சற்று உயர்ந்துதான் காணப்படுகின்றன.

- இவ்வாறு உலக இந்து மாநாட்டுக்காக தமிழகத்திலிருந்து வருகை தந்த பிரபல சொற்பொழிவாளர் ஆர்.பி.வி.எஸ். மணியன் காரைநகரில் பேசும் போது தெரிவித்தார்.

காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் காரைதீவு இந்துசமய விருத்திச் சங்க பதில் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா தலைமையில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் அவர் மேலும் பேசியதாவது:-

தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு ஒரு தாய்க்கும் சேய்க்கும் இடையிலுள்ள தொடர்பு என்று கூறலாம். இப்படியான உரிமையுடன் கூடிய பிணைத்தொடர்பு உலகில் யாருக்கும் இல்லை. உலகில் நீண்ட பரம்பரியத்திற்குச் சொந்தக்காரன் தமிழன். அதனை இன்று வரை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சவூதி வள்ளல் உதவியில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

பேருவலை,மே16

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த 100 முஸ்லிம் மாணவ, மாணவியர்களுக்கு தமது கல்வியைத் தொடர அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சவூதி அரேபியாவில் வசிப்பவருமான லலித் டி சில்வா இதற்கான நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளார்.

இந்த 100 மாணவ மாணவியர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவமும் புத்தளம் மாவட்ட முஸ்லிம் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் அங்குராப்பணக் கூட்டமும் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தளம் பாத்திமா கல்லூரியில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறும்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், லலித் டி சில்வா ஆகியோர் இந்த வைபவத்தில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர் என சம்மேளனப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ் தெரிவித்தார்.

வடமேல் மாகாண முஸ்லிம் வாலிப முன்னணிகளின் சம்மேளனப் பணிப்பாளர் பி.எம்.பாரூக் மற்றும் எம்நமாஸ் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினை இராணுவ விடயம் சார்ந்ததல்ல

### அது மனிதாபிமானம் சார்ந்தது என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம்,மே16

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் என்பது மனிதாபிமானப் பிரச்சினையே தவிர, இராணுவம் சார்ந்த பிரச்சினை இல்லை என்பதனை அரசாங்கமும், பிரதமரும் நன்கு உணர வேண்டும்.

- இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) இன் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய சூழ்நிலையில் அரசு சதீஸ் நம்பியார் போன்ற இராணுவ ஜெனரல்களையும் கடற்படை அதிகாரிகளையும் அழைத்து மீள்குடியேற்றம் பற்றியும் படை குறைப்புப் பற்றியும் ஆலோசிப்பது அர்த்தமற்றதாகும். மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறும் நடவடிக்கையை இராணுவப் பிரச்சினையாக நோக்குவது சிக்கலான விடயமாக அமைவதோடு தற்போது இடைநிறுத்தியுள்ள சமாதானப் பேச்சுக்கள் நிரந்தரமாகவே முறிந்து போவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்து விடும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் நடைபெற்ற 6 சுற்றுப்பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற அரசு பின்னடித்ததாலேயே - அதனை நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசத்தை வழங்கி - பேச்சுக்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இருதரப்பினரும் பங்குபற்றத் தவறும் பட்சத்தில் இலங்கையின் அபிவிருத்திக்கு கிடைக்கக் கூடிய பெருமளவு நிதி கிடைக்காமல் போய்விடக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன்

## வடக்கு, கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த தாய்; சேயினருக்கு போஷாக்கு உணவு

### அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு,மே16

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள எட்டு இலட்சம் மக்கள் 366 அகதிமுகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் எழுபதாயிரம் தாய்மார்களும், மூன்று வயதிற்குக் குறைந்த குழந்தைகளும் போஷாக்கற்ற நிலையில் உள்ளனர். உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் இவர்களுக்கு இலைக்கஞ்சி, திரிபோஷா போன்ற உணவுகள் வழங்கப்படும். இந்தத் திட்டம் அப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும். இத்திட்டம் முலைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படுகிறது. வடக்குகிழக்கிலுள்ள மற்றைய ஆறு மாவட்டங்களுக்கும் போஷாக்கு உணவினை வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன.

புனர்வாழ்வு, மீள் குடியமர்தல் மற்றும் அகதிகள் விவகாரங்கள் அமைச்சு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிய வலய உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் டொனி பண்புரி, உலக உணவுத் திட்ட இலங்கைக்கான பிரதிநிதியும் பணிப்பாளருமாகிய ஜெப்ஹட்டும், அமைச்சின் அதிகாரிகளும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

மூதூரில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் இடம்பெயர்ந்த 8 ஆயிரத்து 314 பேருக்கான உலர் உணவு உதவிகளை உலக உணவுத் திட்டத்திலிருந்து கிடைத்த 54 இலட்சம் ரூபா நிதி உதவியுடன் உடனடியாக வழங்கக் கூடியதாகவிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி உப தபாலகம் தனியார் வீட்டில் இயங்குகிறது

தென்மராட்சி,மே16

பன்னிரண்டு வருட இடைவெளியின் பின்னர் இயக்கச்சி உப தபால் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இயக்கச்சியில் தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த இந்த உப அஞ்சல் அலுவலகம் மாசார், இத்தாவில், கரவெட்டி, பளை ஆகிய இடங்களில் இயங்கி வந்தது.

கடந்த ஒரு வருடமாக இயக்கச்சிப் பகுதியில் மக்கள் தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்து வருவதையடுத்து உபதபால் அலுவலகம் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## விவசாய நிலங்களை மீளப்பெற தென்மராட்சியில் ஒன்றியம் அமைப்பு

தென்மராட்சி,மே16

தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள உள்ள விவசாய நிலங்களை மீளப்பெற்று மீண்டும் விவசாயத்தினை மேற்கொள்ளவென குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவுக்கு தென்மராட்சி விவசாய நில மீட்பு, மீள்குடியமர்வு ஒன்றியம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று மீசாலை கமநல சேவைகள் நிலையத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலில் இக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதேச பெரும்பாக உத்தியோகத்தர்கள் எஸ்.சத்தியேந்திரா, எஸ்.துரைராசா, இராணுவ சிவில் அதிகாரி மேஜர் குணசிங்க, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர்கள் ஞானவேல், டானியல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

குழுவின் தலைவராக இளைப்பாறிய அதிபர் வ.சின்னப்பாவும், செயலாளராக ரி.சிதம்பரப்பிள்ளையும், பொருளாளராக எஸ்.சண்முகநாதனும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.துரைராசா, இ.நாகராசா, செல்வி வி.தங்கரத்தினம், மா.லீலாவிநோதன், எஸ்.சபாரத்தினம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-117)

## மருதங்கேணியில் 67 வீடுகள் நிறுவப்படும்

செம்பியன்பற்று,மே16

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள போக்கறுப்பு கிராம சேவகர் பிரிவில் ஜிரிஇசட் நிறுவனம் 67 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

போக்கறுப்பு, கேவல், வண்ணாங்குளம் ஆகிய கிராமங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கே இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் போக்கறுப்பு கிராம சேவகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (எ-36)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

**Sony, National T.V. 14", 19", 20", 21", 25"** வரையான **T.V.**க்கள், டெக், றேடியோ என்பன சிங்கப்பூரி லிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. (ஒறி யினல் ஜப்பான்) தொடர்பு: 150, **K.K.S. Road, Jaffna.** (17936)

நல்ல இன பால் ஆடுகளும் குட்டி களும் விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு: திருநாவுக்கரசு, 92, இராம நாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். தொ.பே 3717, 5876. (18015)

## திருமண சேவை

298, கோயில் வீதி, நல்லூரில் உள்ள கமலக் கண்ணன் திருமண சேவை 21ஆம் திகதியில் இருந்து 25ஆம் திகதிவரை திறக்கப்படமாட் டாது. P.கமலக்கண்ணன். (18018)

## மணமகள் தேவை

1972, 1973 செவ்வாய்க்குற்றமற்ற எஞ்சினியர்களுக்கும் (இலண்டன் பிர ஜாவுரிமை பெற்று வந்துள்ளார்கள்) மற் றும் ஜேர்மன், லண்டன், கனடாவில் சிறு உத்தியோகமுள்ள மணமகன் களுக்கும் மணமகள் தேவை. தொடர்பு: அபிராமி திருமண சேவை, முதலாம் ஒழுங்கை, கொக்குவில் சந்தி.(18014)

## மணமகன் தேவை

1969ஆண்டு, மேடம், **B.A.**, 1971ஆண்டு, கும்பம், டிப்ளோமா, (7இல செவ்வாய்), யாழ்.இந்து கௌரவ குடும்ப மணமகளிற்கு தகுந்த மண மகன் தேவை. தொடர்பு: து.பஞ்சாட சரம் சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (18011)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, 1969 இல் பிறந்த, ஆயிலியம், லக்கினத்தில் செவ்வாயுள்ள, கிரக பாவம் 40, நற்பண்புள்ள பெண்ணுக்கு பெற்றோர் வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமகனை எதிர்பார்க்கின்றனர். விரும்பியோர் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 1891, மே/பா உதயன். (17995)

## வாடகைக்குத் தேவை

தனியார் பயிற்சி நிறுவனம் நடத் துவதற்கு பொருத்தமான வீடு யாழ் நகரில் இருந்து 3மைல் சுற்றாடலுக் குள் தேவை. பூரண விவரங்களுடன் இல.69, செங்குந்தா வீதி, கல்வியங்காடு எனும் முகவரியில் தொடர்புகொள்ள வும். (18024)

## WANTED BRIDEGROOM

I seek for 31 years old niece preferably professionally qualified in any field or staff grade in state or commercial Institutions. send horoscope and address. Sanmugam, 387, Temple Road, Nallur, Jaffna. (17951)

## தவறிவிட்டது

பளைக்கும் முகமாலைக்கும் இடையில் பஸ்ஸினில் கைச்சங்கிலி 14-05-2003 இல் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் க.நடராசா, செல்வ நாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பலாலி வீதி, சந்திப்பிள் ளையார் கோயிலுக்கு அண்மையில்), என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (18010)

## கீத்தனா பயிற்சி

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல், தலை அலங்காரம், கேக் ஐசிங், பெயின் ரிங், பூவேலை ஆகிய புதிய வகுப்புகள திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இதற்கு, முன்னதாக அனுமதிகளைப பெற்றுக்கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: டச் றோட், உடுவில், ஸ்ரேசன்றோட், சுன்னாகம். (சி-27901)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய **Dobermann Pincher, Great Dane, Dachund** நாய்க்குட்டிகள் குறைந்த விலை யில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (17946)

## நூல் வெளியீட்டுவிழா

வடமராட்சி,மே16

வல்வெட்டி கவிஞர் ஆ.கதிர் காமத்தம்பி எழுதிய 'திருவிளை யாடற் பூசைப் பாமலர்கள்' என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தொண்டமனாறு சந்நிதி யான் ஆச்சிரம மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முது நிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நந்திக் கொடியை ஏற்றி வாழ்த்துரை வழங்க முதுகலை மாணி அருட்கவி புலவர் சி.விநாசித் தம்பி நூலை வெளியிட்டு வைப்பார். மதிப்புரையை சைவப்புலவர் சு.செல் லத்துரையும் மதிப்பீட்டுரையை இந்து கலாசார அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங் கமும் நிகழ்த்துவர். (எ-173)

## தமிழகத்துடன்....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

தமிழன் நிலைநாட்டி காப்பாற்றி வரு கிறான்.

தாயகத்திலிருந்து வருவோரை கனிவோடு வரவேற்கும் பண்பு இலங்கை மக்களுக்கு நிறைய உண்டு. விபுலானந்த அடிகளார் பிறந்தது இம் மண்ணில், தமிழ் வளர்த்தது இம்மண் ணில். ஆலயத்திற்குச் சென்று போவா கள். இறைவனை வணங்குவோரில் ஒரு பகுதியினர் சாஸ்திர பக்தியுடன் வணங்குகின்றனர். மற்றும் ஒரு சிலர் வியாபார பக்தியுடன் வணங்குவர்.

இறைவனிடத்தில் பேரம் பேசும் பக்தியே வியாபாரபக்தி. இன்று இதுவே அதிகமாகக் காணப்படுகின் றது. இறைவா இதை இதைச் செய்ய வேண்டும். பதிலுக்கு நான் இதை இதைச் செய்வேன் என்று பேரம் பேசுகி றோம்; காணிக்கை செலுத்துகின்றோம்.

இறைவன் செய்யவில்லையென் றால் நம்பிக்கை இழக்கிறோம். எந் தச் சமுதாயத்தில் சாஸ்திர பக்தி நிலவுகிறதோ அந்தச் சமுதாயம் வாழும்; நிலைத்து நிற்கும். வாழு கின்ற மண்ணில் நாம் விசுவாசமாக இருக்கவேண்டும். மண்ணை நேசிக்க வேண்டும். அவை எம்மை வளர்க்கும என்று கூறினார்.

கூட்டத்தில் மாவட்ட கலாசார அலு வலர் எஸ்.தியாகராஜா, குருகுல ஆதீன முதல்வர் கண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ம)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மூன்று மாணவிகளுக்கு அண்மையில் சைக்கிள்களை வழங்கியது. யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் மாணவி ஒருவரிடம் சைக்கிளைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ-173)

## வடக்கு, கிழக்கிலிருந்து....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

கடந்த மூன்று ஆண்டுகளுக் கான உதவி நிதியாக ஒரு இலட் சத்து 73ஆயிரம் அமெரிக்க டொலர் களை உலக உணவுத் திட்டம் எமக்கு வழங்கியிருந்தது. அடுத்த வருட இறுதி வரை செலவிடுவதற்கான இன்னும் 55 இலட்சம் அமெரிக்க டொலர்களை மேலதிகமாக வழங்குவதற்கு உலக உணவுத்திட்டம் முன்வந்துள்ளது.

இந்த நிதியினைக்கொண்டு யுத் தத்தினால் வடக்கு - கிழக்கில் பாதிக் கப்பட்டுள்ள 30ஆயிரம் இளம் விதவை களுக்கும் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வதற்கான உதவி கள் செய்து கொடுக்கப்படும். தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி உள்ளவர்கள் விவசாய முயற்சிகளை மேற்கொள்வதற்கான உதவிகளை யும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக கப்படும். - இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். (ம-3)

## இடம்பெயர்ந்த மக்கள்....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிக ளைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு ஏற்ற வகையில் - அவர்களுக்கு நம் பிக்கை ஊட்டும் வகையில் - செயற் பட வேண்டியது அரசின் கடமை. இதனை இலங்கை அரசும், பிரதம ரும் நன்கு உணர்ந்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் அவசர மனிதாபிமான நட வடிக்கைகளுக்கான உபகுழு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியம் என் பன செயற்படுத்தப்படாமல் இருப்பதே தற்போது முக்கிய பிரச்சினைகளாக உள்ளன.

அதுமட்டுமல்லாது, யாழ்.கடல்வல யத்தில் தற்போதும் நடைமுறைப்படுத் தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடித் தொழிலும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அதிகளவிலான இராணு வப் பிரசன்னங்களும், மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் அரசின் கோட்பாட்டிற்கு முரணாகவே காணப்படுகின்றன.

பாதுகாப்பு அமைச்சர் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட் டில், யாழ்.குடாநாட்டில் உள்ள 152 இராணுவ முகாம்களை 88 ஆகக் குறைக்கவும் பலாலி இராணுவ முகாமை சுற்றிவர உள்ள பாதுகாப்பு எல்லைகளைக் குறைக்கவும் உள்ள தாகத் தெரிவித்திருந்தார். இவை வெறும் அறிக்கைகளாக நின்று விடக் கூடாது. அவற்றை நடைமுறைப்படுத் துவதன் மூலமே நம்பிக்கையை ஏற் படுத்த முடியும். புலிகளோ, தமிழ், சிங் கள மற்றும் முஸ்லிம் மக்களோ யுத் தத்தை ஒருபோதும் விரும்பவில்லை. ஆனால், இலங்கை அரசுடன் நாம் கடந்த காலங்களில் மேற்கொண்ட பேச் சுக்கள் மிகவும் கசப்பானதாகவும், ஏமாற் றப்பட்டவையாகவுமே இருந்தன என்ப தனை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

கடந்த கால கசப்பான அனுபவங் களே விடுதலைப் புலிகளுக்கு அச்சத் தையும் எச்சரிக்கை நிலையையும் ஏற் படுத்தியுள்ளன என்பதனை யாரும் மறுக்க முடியாது.

எனவே, அடுத்த ஒரு சில தினங் களுள் அரசு சில துணிச்சலான முடிவு களை எடுத்து நடைமுறைப்படுத்துவ தன் மூலமே தற்போது இடைநிறுத் தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச் சிக்கும், வடக்கு - கிழக்கு புனர்வாழ் வுப் பணிகளுக்கும், டோக்கியோ மாநாடும் சர்வதேச சமூகத்தின் பங்க ளிப்பும் முக்கியமானது என்பதுடன், பிரச்சினைகளுக்கு இறுதியானதும் நிரந் தரமானதுமான தீர்வை காணும் வகை யில் பேச்சுக்கள் முறிவடையாமல் தொடர்ந்து செல்லவேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்புக் களாகும்.

இவற்றினை பிரதமர் நன்கு புரிந்து கொண்டு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதே இன்றைய அவசியத் தேவையாகும்.

- என்று அவர் மேலும் தெரிவித் தார். (ம)

## இம்முறை பேச்சு....

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

அது தங்கியுள்ளது.

'சிரான்' என்று பேசினார்கள். இன்று சிரானின் கதையே இல்லை. அண் மையில் பிரதமர் ரணிலின் நிதியிலி ருந்து சிறு தொகையை ஒதுக்கி 4 குளங்களை புனரமைக்கத் திட்டமிட் டதாகத் தெரிகிறது. இப்படியான ஏமாற் றும் வேலைகளுக்கு எடுபட நாம் தயா ரில்லை.

இருபது வருடங்கள் 80 ஆயிரம் பொதுமக்களையும் 17ஆயிரம் மாவீரர் களையும் இழந்தது இவைகளுக்கா கவா? எம்மை ஏமாற்ற இடமளியோம்.

பேச்சு மேசையில் பேசப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை.

அதனிடையில் சதீஷ் நம்பியார் எம்மிடம் இருக்கும் கனரக ஆயுதங் களைக் களையுமாறு கேட்கிறார். 80 ஆயிரம் பொதுமக்கள் வீணாக அழிக் கப்பட்டார்களே, அதற்கு யாரிடம் போய் நியாயம் கேட்பது?

அம்பாறை மாவட்டத்தில் நிறைய வளங்களுண்டு. அவற்றைப் பயன் படுத்தி பொருளாதாரத்தை அபிவி ருத்தி செய்யவேண்டும்.

ஜப்பான் தொழில்நுட்பத்தில் முன் னேறியது எப்படி? அங்கு எந்தத் தொழில்நுட்பமும் முன்னர் இருக்க வில்லை. மாறாக, வெளிநாடுகளிலி ருந்து தொழில்நுட்ப அறிவைப் பெற்று அது முன்னேறியது.

ஜப்பானை விடத் தமிழீழத்தில் நிறைய வளங்களுண்டு. சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில் மின்னல் வேகத் தில் நாம் அபிவிருத்தி செய்ய முடியும்.

நாட்டிலே நிரந்தரத் தீர்வு வரும் வரையில் சிறு சிறு பிரச்சினைகள் வந்தே தீரும். அதையிட்டு யாரும் அலட்டத் தேவையில்லை.

விடுதலைப் போரில் வீரமுனைக் கிராமம் பாரிய பங்களிப்பைச் செய்துள் ளது. பல அழிவுகளைச் சந்தித்துள் ளது. ஆலயத்துள் வைத்து தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

தமிழர்கள் கிராமம் கிராமமாக அழிக்கப்பட்டார்கள். தமிழர் கிராமங் கள் சூறையாடப்பட்டன; எரியூட்டப் பட்டன. அவற்றின் விளைவே தமிழீ ழப் போராட்டம்.

ஐ.நா. சாசனத்தின்படி ஓர் இனம் அடக்கி ஒடுக்கப்படும்போது அது பிரிந்து நின்று தனிநாடு அமைக்க உரிமையுண்டு.

தமிழரின் தியாகம், நெறிப்படுத் தப்பட்ட யுத்தம் என்பவற்றுக்கூடாக இன்று ஒரு சமாதானம் வந்துள்ளது. இதனைத் தக்க வைத்துக்கொள்ளும் பொறுப்பு அரசையே சார்ந்தது.

தமிழினத்தை அழித்து விடலா மென்ற நோக்கில் சிங்களப் படை கொடிய போரை எம்மீது திணித்தது. தலைவரின் சீரிய வழிகாட்டலில் நாம் வன்னியை மீட்டோம்; சிங்களப் படை யைத் துரத்தியடித்தோம் - என்றார் அவர்.

இக்கூட்டத்தில் அரசியல் பொறுப் பாளர் கௌசல்யன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கோவிந்தபிள்ளை ரஜீந்திரன்**



*தீராத துயர் தந்து ஆண்டொன்று ஆனதடா*
*ஒன்றல்ல ஆண்டுகள் ஆயிரமானாலும்*
*உன் நினைவுகளைச் சுமந்தபடி.*

- குடும்பத்தினர்.

மலர்வு 17.11.1974 உதிர்வு 26.05.2002

*கந்தசாமி ஆசிரியர் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (18030)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 01 - 1945



மறைவு 26 - 05 - 2002

அமரர் சுந்தரம் சுந்தரலிங்கம் (ஓவசியர்)

*திதி:16.05.2003*

எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது

*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (18029)

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## புதுக்கடைத் திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் வைகாசி 2ஆம் நாள் இன்று (16.05.2003) வெள்ளிக்கிழமை பகல் 12.16 தொடக்கம் 2.04 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**நியூ வானு நகைப்பூங்கா**

என்னும் வியாபார ஸ்தாபனம் ஆரம்பித்து வைக்க திருவருள் கூடியுள்ளது.
அத்தருணம் நடைபெறும் மங்கள நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

177A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-21942)

இங்ஙனம்:
ஸ்தாபனத்தாரும் உரிமையாளரும்.

# இதய அஞ்சலி

மண்ணிற்காக
23 - 07 - 1978

விண்ணிற்காக
14 - 05 - 2003



அமரர் கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன

(பௌதிகவியல் சிறப்பு மாணவன்)

சுரேன்!
வளாகத்து மைந்தனடா நீ!
எம்மோடு சிறகடித்து
பாதியில் சிறகொடிந்து
வானகம் சென்றதேனடா!

உன் சிரித்த முகம்
வளாகத்தை பார்க்கும் போது
ஆங்காங்கே தெரியுதடா!
உன் உயிர் மட்டும்
எமை விட்டுப் போனதேனடா?

ஒவ்வொரு Party இலும்
உன் குரல் ஒலிக்கும்
இதமான ராகத்தால்
இசையையே வரவழைப்பாய்
காலனவன் இன்று உன்னை
வரவழைத்தானோடா?

விளையாட்டுப் போட்டிகளில்
சம்பியனடா நீ!
சத்தமின்றி சாதித்தாய்
ஆயிரம் சாதனைகளை
இன்று உன் வாழ்வும்
விளையாட்டானதோடா?

பட்டம் பெற்று
பவனி வரவேண்டிய உன்னை
பாடையில் சுமக்கிறோம்
பல்கலையே கலங்குதையா!
வாடிய மலரான
உன் வாழ்வு
மீண்டும் வருமா?
வசந்தமாய்.

விஞ்ஞான பீடம்
யாழ்.பல்கலைக்கழகம். (18043)

3ஆம் வருட A பிரிவு
மாணவர்கள்.

# துயர் பகிர்கின்றோம்

மலர்வு
23 - 07 - 1978



உதிர்வு
14 - 05 - 2003


அமரர் கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன்

நீ சென்றுவிட்டாய்.........
வளாகத்தின் வாயிலில்
கருப்புக் கதிர்கள் வீசுதடா!
சுரேன்!
நீ விளையாடிய திடல்
தயாகச் சுடுகிறது.
நெஞ்சங்களின் நினைவுப் பாதை வழியே
உன் பிரிவு
நெருடியபடி ஊர்கோலம் போகுதடா!
நீ சென்றுவிட்டாய்......
தினமும் நாம் கண்ணீரில் கரைகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

விளையாட்டு அவை
யாழ்.பல்கலைக்கழகம்.
(18041)

# கண்ணீர் அஞ்சலி



எமது பீட பௌதிகவியல் சிறப்பு மாணவன்

## கி.சுரேந்திரன்

அவர்களின் அகால மரணத்தையிட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம். (18038)

பலாலி இராச ராசேஸ்வரி அம்மன் ஆலயம்

## வழிபடுவோர் சங்கப் பொதுக் கூட்டம் - 2003

இடம்: ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அருகில்
காலம்: 18-5-2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: முற்பகல் 10 மணி

புது நிர்வாகிகள் தெரிவு மற்றும் ஆலயத் திருப்பணிகள் தொடர்பான ஆலோசனைகள், தீர்மானங்கள் மேற்கொள்ள இருப்பதால் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ந.திருபாலசிங்கம்
செயலாளர்

(C/2798?)

சீ.சி.கந்தையா
தலைவர்

## தேங்காய் பிடுங்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயம்!

யாழ்ப்பாணம்,மே16

தேங்காய் பிடுங்கச்சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு அதுவெடித்ததில், இடதுகால் முழங்காலுககுக்கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

புத்தூர் கிழக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் புத்தூர் மேற்கைச்சேர்ந்த குமாரசாமி ஈஸ்வரன் (வயது 27) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## கிளிநொச்சியில் இன்றுமுதல் இருதினங்கள் இலவச மருத்துவ முகாம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களால் கிளிநொச்சிப் பகுதியில் மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் சிகிச்சைமுகாம் இன்று நடைபெறும்.

இரு நாள்கள் நடைபெறவுள்ள இம்முகாமுக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சகல தரப்பிலுமான வைத்திய நிபுணர்குழு இன்று புறப்பட்டுச் செல்கிறது. (எ-15)

## நாடகப் போட்டி

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட மாணவர் ஒன்றியத்தின் விவசாய வாரத்தினை முன்னிட்டு நடத்தும் நாடகப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (எ-9)

## பரிசளிப்பு விழா

வண்ணை. சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய, சைவ சமய பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## ஆலய கூரை தூக்கி வீசப்பட்டது

கடந்த திங்களன்று மழையுடன் கூடி வீசிய கடும் காற்றினால் சித்தன்கேணி பெரிய தம்பிரான் ஆலய கூரை தூக்கி வீசப்பட்டது.

எழுபது அடி நீளமுள்ள ஆலய மண்டபத்தின் ஓட்டுக்கூரை கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டது.

இந்த ஆலயம் அண்மையில் அரச நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்டது. (ஐ-160)



லிபேட்டி அச்சுவேலி



விஜயகாந்த், சிம்ரன், விவேக் நடிக்க
ரமணா
(சீஸ்லர்)
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்)
(C/27941)

நாகம்ஸ் சுன்னாகம்


சரத்குமார், சிம்ரன், கிரண், ரோஜா நடிக்க
அரசு
(சீஸ்லர்)



தினசரி காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(17966)

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய்,
மீராஜஸ்மின்



புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ்

அவள் வருவாளா?
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
CANNIBAL

லஷ்சுமி சினிமா
(இணுவில்)
மாதவன், ஸ்நேகா,
வையாபுரி, மணிவண்ணன், சார்லி
மற்றும் பலர் நடிப்பில்
என்னவளே
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(18034)

# மேசைத் தொலைபேசி விற்பனைக்கு

எந்தப் பிரதேசத்திற்கும் சிக்கலில்லாமல் உரையாடக் கூடிய முறையில் இணைப்புக்கள் செய்து கொடுக்கப்படும்.

- உள்வரும் அழைப்புக்கள் யாவும் இலவசம்.
- வெளிநாட்டு அழைப்புக்கள் - ரூபா 20
- கிழமை நாள்கள் 6-8 மணியில் - 9/=
- சனி, ஞாயிறு, விடுமுறை நாள்கள் - 4/=

ரூ.25000/=

6 மாத உத்தரவாதம்

Dialog to Dialog -
கிழமை நாள்கள் - 6/=
சனி, ஞாயிறு, விடுமுறை நாள்கள் - 3/=

தொடர்பு:

துவாரகை தொலை தொடர்பு நிலையம்.

தும்பளை,
பருத்தித்துறை.
T.P: 070-5213074
T.P: 0777-589101

கதிரேசன் வீதி,
கொழும்பு - 13
T.P: 0777-570244
0776-005555

(18035)


# மரண அறிவித்தல்கள்

அருட்சகோதரி

## மேறி வலன்ரைன் மனுவத்தம்பி

(திருக்குடும்பம்)

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப புறவற சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது வங்காலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் பணிபுரிந்தவருமான அருட்சகோதரி மேறி வலன்ரைன் மனுவத்தம்பி நேற்று (15.05.2003) வியாழக்கிழமை இறைவனடி இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.05.2003) சனிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மாகாண இல்லத்தில் இருந்து புனித மரியாள் பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

*திருக்குடும்ப கன்னியர்,*
*மாகாண இல்லம்,*
*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/27949)

தகவல்:-
அருட்சகோதரி,
அன்சில்லா ஜேம்ஸ்
(மாகாணத்தலைவி,
திருக்குடும்பம்)

## திருமதி சின்னத்துரை தங்கம்மா

ஆஸ்பத்திரி வீதி, தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை தங்கம்மா நேற்று (15.05.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் சின்னத்துரையின் (ஜப்பான்) அன்பு மனைவியும், கணேசலிங்கம் (மலேரியா தடுப்புப் பகுதி, யாழ்ப்பாணம்), ஆனந்தலிங்கம் (அரசினர் வைத்தியசாலை, மல்லாகம்), சந்திரலிங்கம், அழகலிங்கம் (அழகர் கடை, தொழிற்பேட்டை, அச்சுவேலி), பஞ்சலிங்கம், பஞ்சமலர் (பிரதேசசெயலகம், பாண்டியன் குளம்), செல்வலிங்கம் (பாண்டியன் குளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரவதனி, யோகம்மா (முன்னாள் ஊழியர், மல்லாவி மருத்துவமனை), சுவர்ணலதா, ஆனந்தசிறி, அற்புதவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (16.05.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு, அச்சுவேலி. (18044)

தகவல்:
பிள்ளைகள்.

## நடராசா மனோராசா

(வர்த்தகர், மனோ பான்ஸி, சங்கானை)

குளத்தடி வீதி, சங்கானையைச் சேர்ந்த நடராசா மனோராசா நேற்று(15.05.2003) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா நடராசா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மூத்த மகனும், மனோரஞ்சிதத்தின் அருமைக் கணவரும் கௌரி, சந்திரவதனி, கோடீஸ்வரன், ஜீவதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் தியாகராசா (வவுனியா), மனோவதனராசா, காஞ்சனாதேவி, சாந்தினிதேவி (ஆசிரியை, சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வயிரமுத்து வயித்திலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ந.த.இராசரத்தினத்தின் (N.T.R. - வர்த்தகர், சங்கானை) பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2003) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளத்தடி வீதி,*
*சங்கானை.*

(C/27948)

தகவல்:-
ம.மனோரஞ்சிதம் (மனைவி)

## திருமதி செல்லம்மா இராசதுரை

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அங்களப்பாய், இணுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்டவரான திருமதி செல்லம்மா இராசதுரை அவர்கள் நேற்றுமுன்தினம் (14.05.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு இராசதுரையின் அன்பு மனைவியும் வசந்தாதேவி, வசந்தகுமாரி,சுவிஸை வதிவிடமாக கொண்டவர்களான பரிமளநாதன்,வசந்தநாதன்,பவளகாந்தன்,பிரபாகரன்,சிறீநளினி,காலஞ்சென்ற வசந்தகுமார்(இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி, ஆறுமுகம்,சுவிஸைச் சேர்ந்தவர்களான இராஜேஸ்வரி, மகேந்திரமலர், கலாவதி,சசிகலா,ரவிதரன்,பிஜி ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறிரஞ்சினி(கனடா),தர்மகுலசிங்கம்(சுவிஸ்), கலைச்செல்வி(சுவிஸ்), கலையரசி(இத்தாலி), கனடாவைச் சேர்ந்தவர்களான கலைவாணி, கல்யாணி, தயாகரன், சசிகரன், கபெஸ்கர்(இணுவில்), பிரசாத்(இணுவில் மத்திய கல்லூரி) சுவிஸைச் சேர்ந்தவர்களான மயூரன், கௌதினி, மதுஷன்,கௌசிகன்,தர்சன், வாசினா, பவநீதன், பவித்திரா, விதுஷன், மௌசீகன், விநோயன்,விதுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அங்களப்பாய்,*
*இணுவில் கிழக்கு.*

(18042)

தகவல்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## உயிரிழந்த யுவதி முதலில் சிகிச்சை பெற்ற

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் தீவிர 'சார்ஸ்' கண்காணிப்பு!

'சார்ஸ்' நோயாளி எனச் சந்தேகிக்கப்பட்ட யுவதி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து சாவகச்சேரி ஆஸ்பத்திரி தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

'சார்ஸ்' நோய் அறிகுறிகளுடன் யாழ்.ஆஸ்பத்திரியில் மரணமடைந்த நுணாவில் பகுதியைச் சேர்ந்த அந்த யுவதி முதலில் கடந்த 12ஆம் திகதி சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலேயே சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னரே அவர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

இதன் காரணமாகவே சாவகச்சேரி ஆஸ்பத்திரி தீவிர 'சார்ஸ்' கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மருத்துவக் குழு ஒன்று கடந்த புதனன்று அங்கு சென்று 'சார்ஸ்' நோயாளி பராமரிக்கப்பட்ட விதம் குறித்து பணியாளர்களுடன் கலந்துரையாடியது.

பிரஸ்தாப யுவதிக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், பணியாளர்களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டன.

மேற்படி யுவதி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அன்று அங்கு பணிபுரிந்த சகல பணியாளர்களும் அடுத்த 10, 12 தினங்களுக்கு கண்காணிக்கும் படியும், இக்காலப் பகுதியில் அவர்கள் எவரும் வெளி மாவட்டங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

போரினால் பெரும் சேதமடைந்த சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை வசதியீனங்களுடன் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-31)

# சீன, தாய்லாந்து மீன்பிடிக் கப்பல்கள் தென்பகுதிக் கடலில் ஆக்கிரமிப்பு!

## எதிர்த்துப் போராட மீனவர்கள் தயாராகின்றனர்

வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் நவீன உபகரணங்களைக் கொண்டு தென்பகுதி கடலில் மீன் பிடிப்பதற்கு எதிராகப் போராட, தென்பகுதி மீனவர்கள் தயாராகி வருகிறார்கள்.

ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்துவதெனவும், சத்தியாக்கிரகம் செய்வதெனவும் மீனவர் சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன. இறுதி நடவடிக்கையாக வேலைநிறுத்தம் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

முதலில் [illegible] யின் அங்கீகாரத்துடன் சீன, தாய்லாந்து மீன்பிடிக் கப்பலகள் தென்பகுதி கடலில் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன.

நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல்கள் பாரிய அளவில் மீன்களைப் பிடித்து வருவதால் தென்பகுதி கடலில் மீன்வளம் குன்றிவருவதாக தென்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலைமை நீடித்தால் தென்பகுதி கடலில் மீன்வளம் அழிந்து தாங்கள் தொழிலிழக்க நேரிடும் என்பதாலேயே போராட்டத்துக்கு தயாராகி வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நெருக்கடி காரணமாக அப்பேச்சுக்கள் செவ்வாயன்று நடைபெறவில்லை. அரசியல் நெருக்கடி குறித்து ஆராயும் சுதந்திர கட்சி உறுப்பினர்களின் விசேட கூட்டம் நடைபெறுவதால் பேச்சுக்கள் செவ்வாயன்று இடம்பெறமாட்டா என்று சு.க.தலைமையகம் ஜே.வி.பிக்கு அறிவித்திருந்தது.

இதையடுத்து, எதிர்வரும் 18ஆம் திகதி அப்பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன. திங்களன்று இருதரப்பினரும் கூடி சுமார் ஒன்றரை மணி நேரமாகப் பேச்சு நடத்தினர். அப்பேச்சுக்களும் பூர்த்தி செய்யப்படாமலேயே முடிவுற்றன என அறியப்படுகிறது.

இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம், பொருளாதார, அரசியல், இனப் பிரச்சினைகள் ஆகியவை குறித்து இருதரப்பினரும் பேசி வருகின்றன.(ஐ)

## நமது மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைதானத்தில் வந்திறங்கினர். அவர்களை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், அரசியல் ஆலோசகர் மாரித் பேகிர், நோர்வே அரசுப் பேச்சாளர் சிபிஸ் பார்க், கொழும்புக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், இரண்டாவது செயலாளர் தோமஸ் ஹக்லண்ட் ஆகியோர் நோர்வே தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

முதலில் கிளிநொச்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்துக்குச் சென்ற இப்பிரதிநிதிகள் 'சிராண்' உபகுழுவை செயற்படுத்துவதில் உள்ள நெருக்கடிகள், சிக்கல்கள் குறித்து அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் ஆராய்ந்தனர். புலிகளின் பேச்சுக்குழு வள ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் உட்பட பல பிரமுகர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

பின்னர் இயக்கச்சிப் பகுதிக்கு விஜயம் செய்த நோர்வே குழுவினர், அங்கு இடம்பெறும் - கண்ணிவெடி அகற்றுதல் மற்றும் கண்ணிவெடி செயலிழப்பு - நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சியில் புலிகளின் சமாதானச் செயலக அலுவலகத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்ததும் அங்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடனான சந்திப்பு ஆரம்பமானது.

இந்தச் சந்திப்பில் புலிகளின் தரப்பில் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாணத் தளபதி கருணா, திருகோணமலை மாவட்டத் தளபதி பதுமன், புலிகளின் பேச்சுக் குழு வள ஆலோசகர் சட்டத்தரணி வி.உருத்திரகுமார் ஆகியோர் பங்கு கொண்டனர்

நேற்றைய பேச்சுக்களை முடித்துக் கொண்டு நோர்வேக் குழுவினர் நேற்றுப் பிற்பகலே ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்பு புறப்பட்டனர். (ஐ-3)

## அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆலோசனை அலரி மாளிகையில் நடைபெற்றது.

அரசின் இன்றைய சமாதான நடவடிக்கைகள், டோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம், வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து இந்திய நிபுணர் சதீஷ் நம்பியார் சமர்ப்பித்த அறிக்கை ஆகியவை குறித்தும் இவர்கள்.இருவரும் ஆலோசனை நடத்தினர் எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்கும் ஜனாதிபதியின் கட்டளையை வர்த்தமானியில் வெளியிடும் நடவடிக்கையும் முடிவின்றி முடங்கிப் போயிருக்கின்றது.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது குறித்து அரசாங்க அச்சகர், சட்டமா அதிபரின் கருத்தைக் கோரியிருந்தார். சட்டமா அதிபரும் அது பற்றிய தனது கருத்தை ஜனாதிபதிக்கு மட்டும் அறிவித்திருக்கிறார்.

இவ்விடயத்தில் சட்டமா அதிபரின் கருத்தை தான் கோராததால ஜனாதிபதி அக்கருத்து குறித்து கவனம் செலுத்தாதிருந்து வருகிறார்.

சட்டமா அதிபரின் கருத்து தனக்கு இன்னமும் கிடைக்காததால் அரசாங்க அச்சகர் அக்கருத்து கிடைக்கும்வரை காத்திருக்கிறார்.

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கான வினைத் திறமை தடைப் பரீட்சை

## ஜூன் 7ஆம், 8ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்,மே16

பட்டதாரி பயிலுநர்களை அரச முன்னுரிமை நடவடிக்கைக்காக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டிருப்போருக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்காக -

அமைச்சு திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சகல பாடசாலைகளிலும் உள்ள - மேற்படி பரீட்சைக்கு தோற்ற தகுதிவாய்ந்த - உத்தியோகத்தர்களிடமிருந்து வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை 'செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இலக்கம் 35, மகசெய்ஸர் வீதி, உவர்மலை, திருமலை' என்ற முகவரிக்கு எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் தொடர்பான விவரங்களை கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் ஸ்போட் ஸ்பொட்டில்' அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். அல்லது வேலணை பிரதேச செயலக உள்ளூராட்சி உதவியாளர் தம்பிராசா ஸ்ரீ முரளிதரனிடம்பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை -

புதிதாக உருவாக்கப்பட இருக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான பிரமாணக் குறிப்புகளை வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டிருக்கிறது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூகசேவை உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள், திட்டமிடல் நிகழ்ச்சியிடல் உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், மருத்துவ ஆவணக் காப்பு உதவியாளர்கள் ஆகியோரை உள்ளீர்த்து இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உருவாக்கப்படவுள்ளது. (ஐ)

## பேச்சுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அவர் கிளிநொச்சியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இனவிவகாரத்துக்கு தீர்வுகாணும் முயற்சியில் அனுசரணையாளர் பொறுப்பை எமது நாடு ஏற்றபினனர் முதல் முறையாக இலங்கை வந்துள்ளோன்.

கொழும்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினேன். விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை சற்று முன்னர் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

பிரபாகரனை இன்று நான் சந்தித்தது, சமாதான முயற்சியின் முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடுவதற்காகவே. தீர்மானம் எடுக்கும் சந்திப்பு அல்ல. இதுவரை மேற்கொண்ட சமாதான நகர்வுகளின் முன்னேற்றம் குறித்து பரிசீலனை செய்தேன். அவர்களின் நிலைப்பாட்டை அறிந்தேன்.

பேச்சுக்களை நடத்துவதற்கு அனுசரணையாளராக எனது சார்பில் பணியாற்றும் எனது அமைச்சின் பிரதி அமைச்சர் சமாதான முயற்சிகளில் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அறிவதற்காகவும் நான் இலங்கை விஜயத்தை மேற்கொண்டேன்.

விடுதலைப் புலிகளின் தலைவருடன் பலவிடயங்கள் குறித்து பேசினேன். தமது நிலைப்பாட்டை அவர் விளக்கிக் கூறினார். ஜப்பானில் நடக்கும் உதவி வழங்கும் மாநாட்டுக்கு சமூகமளிக்க முடியாமைக்கான காரணங்களை விளக்கிக் கூறினார்.

இந்த மாநாட்டில் ஒன்றாகப் பங்குபற்ற இருதரப்புக்களும் ஏன் இணங்கவில்லை என்ற விடையத்தை சர்வதேச சமூகத்துக்கு விளக்கவேண்டிய பாரிய பொறுப்பு எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. அந்தச் சமூகத்தின் பல கேள்விகளுக்கு நாம் பதில் அளிக்க வேண்டியுள்ளது என்றார் பீற்றர்ஸன்.

நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும், பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் கருத்துக் கூறுகையில்-

இன்றைய சந்திப்பில் டோக்கியோ மாநாடு விவகாரம் முக்கிய இடத்தைப் பெற்றது. அதைவிட பல விடயங்கள் குறித்தும் பேசினோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேசினோம். பிரபாகரன் தெரிவித்த விடயங்களை பிரதமரிடம் தெரிவிப்போம். சமாதான முயற்சிகள் தொடரும், பேச்சுக்கள் தொடரும் என நம்புகிறோம்- என்றார். (ஐ-3)


### தேவை

கணனி வேலை தெரிந்த அனுபவமுள்ள கணனித் தட்டெழுத்தாளர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

உடனடி வேலைவாய்ப்பு

தொடர்பு:-

அம்பாள் பிறிண்ரேஸ்

195/4, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. (18021)

### எமது புதிய வீடியோ CD வெளியீடு

ஷாம் நடித்த

அன்பே அன்பே

நிதர்ஷன் வீடியோ

மயிலங்காடு

CD பிரதிகளை

சந்திரன் மினி, யாழ்ப்பாணம்.

டினா றெக்கோடிங் சென்ரர், நெல்லியடியிலும் பெற்றுக்கொள்ளலாம் (18039)

### எமது புதிய வீடியோ CD வெளியீடு

ஷாம், விவேக்கின்

அன்பே அன்பே

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்

யாழ்ப்பாணம். (18600)

### BITSMANS

A/L 2004 இரசாயனம்

திரு.N.மகேஸ்வரன்

PAPER CLASS

(பொது இரசாயனம்)

ஆரம்பம்: 17.05.2003 சனி 4.30 p.m.

A/L 2004

பௌதிக இரசாயனம்

ஆரம்பம்: 18.05.2003 ஞாயிறு 4.30 p.m. (C/27914)

### பொருளியற் கல்லூரி

நாவலர்றோட் - யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH WITH GRAMMAR

LECTURER BY:

NISHANTHAN

(Dip.in.English)

புதிய பிரிவு ஆரம்பம்

17.05.2003 சனி 3.00 p.m. (ப.நே.)

Note: நீங்கள் சுலபமாக எழுத, இலகுவாக பேச, வாசிக்க 6 மாதத்தில் Grammar உடன் முடித்துக்கொள்ளப்படும். (C/27921)

### மொழிபெயர்ப்பாளர்கள் தேவை (TRANSLATORS)

1. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் (ENGLISH TO TAMIL)

2. சிங்களத்திலிருந்து தமிழுக்கும் (SINHALA TO TAMIL)

மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய பகுதி நேர (PART TIME) / முழு நேர (FULL TIME) மொழி பெயர்ப்பாளர் தேவை. மொழியாற்றல், மொழி பெயர்ப்பு அனுபவம் மற்றும் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

மனிதவள அலுவலர்,
உதயன் பத்திரிகை நிறுவனம்,
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/27946)


### கண்ணீர் அஞ்சலி

எமது வவுனியா திருமறைக்கலாமன்ற இணைப்பாளர் திருமதி சூரியகலா அமரநாதன் அவர்களின் அன்புத் தந்தையார்

கே.மயில்வாகனம்

அவர்கள் நேற்று அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருறும் உறவுகளின் துயரத்தில் நாமும் பங்கேற்று அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

238,பிரதான வீதி, யாழ்ப்பாணம். திருமறைக்கலாமன்றம் (C/27950)

### மரண அறிவித்தல்

திருமதி சபாரெட்ணம் விஜயலட்சுமி (ராசு)

சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், நாலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரெட்ணம் விஜயலட்சுமி நேற்று (15.05.2003) வியாழக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரெட்ணத்தின் அன்பு மனைவியும் நித்தியானந்தன், திலகராணி, புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஸ்பதேவி, காலஞ்சென்ற தனரெட்ணம் மற்றும் தேவதாஸன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் தவமணி, தவராஜா, நித்தியலட்சுமி, திருச்செல்வம் ஆகியோரின் சகோதரியும் தடிபால், றஜீவன், தனுசியா, ஆஷா, விதுர்சன், ஷர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2003) சனிக்கிழமை காலை 10.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வில்லூன்றி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தகவல்: நித்தியானந்தன் (மகன்) (18045)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.